# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 02.04.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 123 | பக்கங்கள் : 16





05 புத்தாண்டை முன்னிட்டு 1000 ரூபா பெறுமதியான நிவாரணப்பொதி





07 இராயப்பு ஆண்டகையின் திருவுடல் யாழ்.ஆயர் இல்லத்தில் அஞ்சலிக்கு





11 மூன்றாவது கொரோனா அலை இலங்கையில் ஏற்படும் அபாயம்!





13 பங்களாதேஷுடனான ரி-20: நியூஸிலாந்து பெரு வெற்றி!


# இந்தியாவுக்கு எதிராக தேரர்கள் போர்க்கொடி!

## இலங்கை இறையாண்மையில் தலையிடுவதாக 12 சிரேஷ்ட தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஏப்.02

"மாகாண சபைத் தேர்தல், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளிட்ட விடயங்களில் இந்தியா தலையிடுவது இலங்கையின் இறையாண்மையை பலவீனப்படுத்தும். புதிய அரசமைப்பை நடைமுறைப் படுத்தும் வரை மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவது சாதகமாக அமையும். மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என நாட்டு மக்கள் எவரும் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. தேர்தலுக்குச் செலவிடும் 500 கோடி ரூபா நிதியை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளியுங்கள்."

-இவ்வாறு பௌத்த மதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

15

## சீன தயாரிப்பு தடுப்பூசி மிகவும் ஆபத்தானது!

### ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு,ஏப்.02

சீனாவின் தயாரிப்பான கொரோனா வைரஸுக்கு எதிரான சினோபார்ம் தடுப்பூசியைப் பயன் படுத்துவதற்கு மருத்துவ உத்தரவாதம் இல்லை என முன்னாள் சுகாதார அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தத் தடுப்பூசி பயன்பாடு மிகவும் ஆபத்தானது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

15

## மனைவியை கொன்றுவிட்டு கணவனும் உயிர்மாய்ப்பு!

### மூன்று பிள்ளைகள் நிர்க்கதி கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 02

கிளிநொச்சியில் மனைவியை கொலை செய்துவிட்டு தானும் உயிரை மாய்த்துள்ளார் குடும்பத்தலைவர் ஒருவர்.

அதனால் அவர்களது 3 பிள்ளைகள் நிர்க்கதியாகியுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளை - சிவபுரம் கிராமத்தில் நேற்று நண்பகல்

15

## "சாதனைத் தமிழன்" மரியசேவியர் அடிகள் இறைபதம்



யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ். மறைமாவட்டக் குருவும் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான அருட் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் வியாழக்கிழமை நேற்று மாலை இறைபதம் அடைந்தார்.

கலை வழி இறை பணி என்ற விருதுவாக்குடன் திருமறைக்கலா

15

### இந்திய நிலைப்பாடு காரணமாக

## இலங்கையில் தடுப்பூசி ஏற்றல் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

கொழும்பு, ஏப். 02

அஸ்ராசெனேகா தடுப்பூசியை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையை இந்தியா இடைநிறுத்தியுள்ளதால் இலங்கையில் தடுப்பூசி வழங்கும் செயற்பாடும் நேற்று முன் தினம் முதல் தற்

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் 22 பேருக்கு கொரோனா!

### இருவர் கல்வியங்காடு சந்தையில் அடையாளம்

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாணத்தில் மேலும் 22 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்று வியாழக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் இருவர் கல்வியங்காடு பொதுச் சந்தை

15

## யாழ்.நகர கடைகள் திறப்பு அடுத்த வாரம்தான் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களிடம் அடுத்த வாரம் இரண்டாம் கட்ட பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட பின்னர் வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதிப்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று வடமாகாண சுகா

15

## நட்பு நாடுகளை இழந்துள்ளோம்!

### கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 02

கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு ஆதரவளித்த நட்பு நாடுகளில் பெரும்பான்மையை நாங்கள்

15

## சுகாதாரத்துறை மேம்பாடு குறித்து இந்தியாவுடன் இலங்கை பேச்சு!

### யாழ். போதனா வைத்தியசாலையின் தாய் சேய் பிரிவும் நவீனமயப்படுத்தப்படும்

கொழும்பு, ஏப்.02

இலங்கையின் சுகாதாரத் துறை சேவையை மேம்படுத்துவதற்குத் தேவையான செயல் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்துவது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

15

## இராயப்பு ஆண்டகையின் இறுதிச்சடங்கு திங்களன்று

மன்னார், ஏப். 02

மறைந்த ஒய்வு நிலை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி யாத்திரைத் திருப்பலி எதிர்வரும் திங்கள்கிழமை மாலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஒய்வுநிலை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நேற்றுக் காலை காலமானார்.

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு...

உம்மாரே கஸ்சப தேரர், அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே ஆனந்த தேரர் ஆகிய 12 சிரேஷ்ட தேரர்கள் ஒன்றிணைந்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையை அறிந்து ஆச்சரியமடைந்தோம். ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெறும் வேளை இவ்வாறான கருத்துக்கள் குறிப்பிடுவது அரசியல் இராஜதந்திரம் என உணர்ந்தோம்.

இலங்கை தொடர்பிலான 46.1 பிரேரணை மீதான விவாதத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளவில்லை. இந்தியாவின் இச்செயற்பாடு இலங்கை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டை நன்கு வெளிப்படுத்தியுள்ளது. அயல்நாடு என்ற ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தி அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது. இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் உரிமை இந்தியாவுக்கு கிடையாது. ஆகவே இந்த விடயம் குறித்து அரசாங்கம் இந்தியாவுக்கு உறுதியான தீர்மானத்தை அறிவிக்கவேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்பது பெரும்பான்மை மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக காணப்பட்டது. புதிய அரசமைப்பு குறித்து ஜனாதிபதி அதிக அவதானம் செலுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை திட்டமிட்டு பிற்போட்டது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்கினார்கள். ஆகவே தற்போதைய அரசாங்கம் மாகாண சபை தேர்தலை பிற்போட்டுள்ளது என்று எவரும் குற்றஞ்சாட்டமாட்டார்கள். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள.

மாகாண சபைத் தேர்தலை நடத்த குறைந்தபட்சம் 500 கோ நிதியாவது தேவைப்படும்.எத்தரப்பினருக்கும் பயனளிக்காத மாகாண சபை தேர்தலுக்காக பெருந்தொகையான பணத்தை செலவிடுவது பயனற்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நாட்டு மக்கள் எவரும் போராட்டங்களில் ஈடுபடவில்லை. மாகாண சபைத் தேர்தலுக்கு செலவிடும் பணத்தை பொருளதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண அடிப்படையிலாவது பகிர்ந்தளியுங்கள். அப்போதாவது மக்கள் பயன் பெறுவார்கள்.

புதிய அரசமைப்பை உருவாக்கி அது நடைமுறைப்படுத்தும் வரை மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தக் கூடாது. வீண் செலவுகளை குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. அவ்வாறாயின் இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு மாகாண சபை தேர்தல் அவசியமற்றது. அதற்கு செலவிடும் நிதியும் பயனற்றது. ஆகவே ஜனாதிபதி நாட்டு மக்களுக்குப் பயன்பெறும் விடயங்களில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டும்- என்று குறிப்பிட்டுள்ளனர். (அ-எ)

## நட்பு நாடுகளை...

இழந்துவிட்டோம் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் கரு ஜயசூரிய மேலும் கூறியுள்ளதாவது:

கடந்த காலத்தில் பல சந்தர்ப்பங்களில், இலங்கை குறித்து மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களில், பெரும்பான்மையினரின் நம்பிக்கையை இலங்கை வென்றெடுக்க முடிந்தது.

ஆனால் அப்போது ஆதரவளித்த பெரும்பான்மையான நாடுகள், தற்போது ஆதரவளிக்க விரும்பவில்லை. இதற்கு முக்கிய காரணம், தற்போதைய அரசாங்கத்தால் பின்பற்றப்படும் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளாகும்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர வாக்களித்த பெரும்பான்மையின மக்களின் ஒப்புதல் கூட இல்லாமல் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது திருத்தத்தின் காரணமாக இலங்கை, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பலவீனமடைந்துள்ளது என்ற விடயம் ஜெனீவாவில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டது-என்றார்.

## சுகாதாரத்துறை...

வுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இரு தரப்பு பேச்சு இடம் பெற்றது.

இதற்கமைய இந்தச் செயல்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கும், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான பேச்சு நேற்று இலங்கைக்கான இந்திய தூதரகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்தும் செயல்திட்டத்துக்கு மேலதிகமாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் இருதய நோயியல் பிரிவை ஸ்தாபித்தல், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாய் சேய் பிரிவை நவீனமயப்படுத்தல், தங்காலை ஆரம்ப வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை நவீனமயப்படுத்தல், தெஹியத்த கண்டி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல் ஆகியவை செயல்படுத்தப்படவுள்ளன.

இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணக்கம் தெரிவித்தமைக்கு அரசாங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சி இதன்போது குறிப்பிட்டார்.

சுகாதார சேவையை மேம்படுத்தும் செயல்திட்டத்தை விரைவாக செயல்படுத்தும் காரணிகளை சுகாதார அமைச்சர், இந்திய தூதுவருக்கு தெளிவுபடுத்தினார். (அ-எ)

## மனைவியை...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது என்று ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மனைவியை கழுத்தை நெரித்து கொலை செய்த கணவன், மனைவியின் சேலையில் தூக்கிட்டு அவரும் உயிரை மாய்த்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

வேலாயுதம் சிவஞானம் (வயது-38) அவரது மனைவி குகனேஸ்வரி (வயது-36) என்பவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்களுக்கு 16 வயதில் மகளும், 13 மற்றும் 6 வயதில் இரண்டு மகன்களும் உள்ளனனர்.

மேதிலக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சாதனைத் தமிழன்...

மன்றத்தின் செயற்பாட்டை இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் விஸ்தரித்து கலை அனைவரையும் ஒன்றிணைக்கும் ஆயுதம் என்பதை செயலில் காட்டிய மரியசேவியர் அடிகளார், திருமறைக் கலாமன்றம் என்ற கலைநிறுவனத்தை நிறுவி 55 ஆண்டுகளுக்கு மேலாக வழிநடத்தி வந்தவர்.

வரலாற்றில் பல சாதனைகளை புரிந்து தமிழுக்கும் மறைக்கும் பெரும்பணியாற்றிய இவரின் இழப்பு பேரிழப்பாகும்.

டான் தொலைக்காட்சியின் சாதனைத் தமிழன் விருது கடந்த 2019 ஆண்டு மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்ப்பாணத்தில்...

வியாபாரிகள் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவ பீட ஆய்வுகூடம் இரண்டிலும் 778 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

22 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 7 பேரின் மாதிரிகள் நேற்றைய பரிசோதனையில் முடிவைக் கண்டறிய முடியாதவை என அறிக்கையிடப்பட்டது. அவர்களிடம் நேற்று மீளவும் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட போது ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கல்வியங்காடு பொதுச் சந்தை வியாபாரிகளிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் இருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளிகளில் திருநெல்வேலி சந்தையில் பணியாற்றும் மூவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் திருநெல்வேலி சந்தை வியாபாரி ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மூவர் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டவர்கள். இருவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்றவர்கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொறியியலாளர் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்ட நிலையில் அவரது மனைவி மற்றும் பிள்ளைக்கும் இன்று தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அனைவரும் தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் தலா ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## இலங்கையில்...

காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இத் தகவலை தெரிவித்தார்.

அஸ்ராசெனேகா தடுப்பூசி ஏற்றுமதியை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதால், நாட்டில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அஸ்ராசெனேகா தடுப்பூசியை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாகவும் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஜனவரி 29 ஆம் திகதி தொடக்கம் தடுபூசிகளை ஏற்றிக் கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றுவதற்காக 2 இலட்சத்து 36 ஆயிரம் தடுப்பூசிகள் எஞ்சியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஒக்ஸ்போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுவரை 12 இலட்சத்து 64 ஆயிரம் ஒக்ஸ்போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பூசி நாட்டிற்கு கிடைத்துள்ளதுடன், அவற்றில் 9 இலட்சத்திற்கும் அதிகமான அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பூசியை நாட்டிற்கு இறக்குமதி செய்யும் அதிகாரமுள்ள நிறுவனமாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உள்ளது.

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து 15 இலட்சம் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது.

அவற்றில் 5 இலட்சம் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், கடந்த மாதம் மேலும் 05 இலட்சம் தடுப்பூசிகளை வழங்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், திட்டமிட்டவாறு இது வரையில் அந்த தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இராயப்பு...

ஆயரின் திருவுடல் யாழ்ப்பாணம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு பெருமளவானோர் அஞ்சலி செலுத்தினர்.

இன்று மதியம் மன்னாருக்கு அவரது திருவுடல் எடுத்துச் செல்லப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை அவரது இறுதி யாத்திரைத் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறும்.

## யாழ். நகர...

தார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

"கடந்த ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் ஆயிரத்து 440 பேரை பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டதில் 43 பேருக்கு தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 7 பேரின் மாதிரிகள் முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளன என அறிக்கையிடப்பட்டது. அவர்கள் 7 பேரிடமும் நேற்று மீளவும் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் நேரடித் தொடர்புடையவர்கள், வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களிடம் இரண்டாம் கட்ட பரிசோதனை வரும் திங்கட்கிழமைக்கு பின்னர் முன்னெடுக்கப்படும். அதன் பின்னர் வர்த்தக நிலையங்களைத் திறப்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும்" என்றும் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## சீன தயாரிப்பு...

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையகம், சினோபார்ம் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி வழங்கவில்லை .

மேலும், சீன உற்பத்தியாளர், தடுப்பூசி குறித்த எந்தத் தகவலையும் வழங்கவில்லை. இந்நிலையில் இந்தத் தடுப்பூசிக்கு அரசியல் ஒப்புதல் மாத்திரம் இருக்கின்றது.

இதேவேளை, சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட நிபுணர் குழுவுக்குப் பதிலாக அமைச்சர் சன்ன ஜெயசுமணவுக்கு விசுவாசமானவர்கள் தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, எந்தத் தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு வழங்கவேண்டும் என்பதை ஜனாதிபதி தீர்மானிக்கக்கூடாது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும், தடுப்பூசிகளை ஆய்வு செய்யும் நிபுணர்கள் குழுவும் குறித்த தடுப்பூசி பயன்பாட்டுக்கு ஏற்றதல்ல என்று குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, சீன தடுப்பூசி குறித்து போதுமான தகவல்கள் இல்லை. அதிகாரிகள் இது பயன்பாட்டுக்கு ஏற்றதல்ல என்று கூறியுள்ள நிலையில் நமது ஜனாதிபதி ஏன் இத்தகைய தடுப்பூசிகளை இறக்குமதி செய்கிறார் என்றும் கேள்வியெழுப்பினார்.

மியன்மாரில் கூட, மக்களுக்கு எந்தத் தடுப்பூசி கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பவர் ஜனாதிபதி அல்ல.

தடுப்பூசி நன்கொடையாக வழங்கப்பட்டதால் அவசரகால பயன்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், யாராவது எங்களுக்கு இலவசமாக விஷத்தை அனுப்பினால், அதனைப் பயன்படுத்துவோமா?-என்றார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

புலம்பெயர் நாடொன்றில் உள்ள ஒரு நண்பர் அடிக்கடி கேளிக்கை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வார். அங்கே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று எல்லாம் இருக்கும். இந்த ஊர்க்குருவியையும் அவர் இவற்றுக்கு அழைக்கத் தவறுவதில்லை. அந்த நண்பர் அழைப்பதால் தவிர்க்கமுடியாமல் அவற்றுக்கு சென்று வருவதுண்டு. ஒரு தடவை, இந்த ஊர்க்குருவியைப் பற்றி ஒருவர் பலர் முன்னிலையில் விமர்சிக்கத் தொடங்கினார்.

புலம்பெயர் நாடுகளில் எத்தனை விழாக்கள் நடக்கின்றன. தமிழ்த் தேசிய உணர்வை மக்களுக்கு ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு வாரமும் ஒரு நிகழ்ச்சியாவது எங்காவது ஒரு இடத்தில் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இதுபோன்ற ஏதாவது ஒரு விழாவுக்காவது இந்த ஊர்க்குருவி போனதைக் கண்டிருக்கின்றீர்களா? - இது ஒருவர் முன்வைத்த வாதம்.

உண்மைதான், இதுபோன்ற விழாக்களுக்கு வருபவர்கள் எல்லோருமே தமிழ்த் தேசிய உணர்வு உள்ளவர்கள். ஆனால், இப்படி உணர்வுபூர்வமான வைபவங்களுக்கு செல்லாமல் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு செல்பவர்கள் அத்தகைய தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அல்ல. ஆனால், இத்தகைய கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு சென்றுவரும் இந்த ஊர்க்குருவி அவர்களிடத்திலேயே அவர்களுக்கு புரிகின்ற விதத்தில் தமிழ்த் தேசியக் கருத்துக்களை சொல்கின்றது. அதுதான் உண்மையில் தேவையானது என்று மற்றுமொருவர் ஊர்க்குருவிக்காக வாதாடினார்.

அண்மையில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்றை பார்த்தபோது இந்தச் சம்பவம்தான் ஞாபகத்திற்கு வந்தது. இங்கிலாந்தில் வாழும் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்களின், ‘ஜனநாயகத்துக்கான ஆனந்தியர்கள்’ என்ற அமைப்பு மெய்நிகர் கருத்தரங்கு ஒன்றை அண்மையில் நடத்தியது.

ஆனந்தா கல்லூரி என்பது ஏராளமான உயர் இராணுவ அதிகாரிகளை உருவாக்கிய கல்லூரி. இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய ஆனந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய மனோ கணேசன் இரண்டு விடயங்களை வலியுறுத்தினார்.

‘இலங்கையில் சிங்கள மொழி பேசுகின்றவர்கள், பௌத்த மதத்தை பேணுகின்றவர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை. அதில் எமக்கு பிரச்னை இல்லை. அதுபற்றி உண்மையில் நான் மகிழ்கிறேன். ஆனால், இந்த சிங்கள, பௌத்தம் மட்டும் இலங்கை அல்ல. எழுபத்தி ஐந்து என்பது நூறு அல்ல. தொண்ணூற்று ஒன்பது கூட நூறு அல்ல. எழுபத்தி ஐந்துடன் இன்னோர் இருபத்து ஐந்து சேர வேண்டும் அதுதான் நூறு. அதுதான் இலங்கை.’ என்றார்.

தமிழர்களுக்கு அதிகாரத்தை பிரித்து கொடுத்தால், அவர்கள் தனியொரு நாட்டை அமைத்துக்கொண்டு போய் விடுவார்கள் என்ற பயம் சிங்கள மக்களுக்கு இருக்கிறது. தமிழர் மத்தியில் ஆயுதப் போராட்டம் மீண்டும் தலையெடுக்கும் என்ற பயமும் இருக்கிறது. மிக நியாயமான பயங்கள் இவை. சிங்களவர் ஏன் இப்படி நினைக்கிறார்கள் என சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவதுண்டு. நான் அவர்களிடம், இல்லை, அவர்களின் இந்த பயம் நியாயமானது. அதை நாம் நிவர்த்திப்போம் என்று கூறுகிறேன்.

அதேபோல், தமிழர் மத்தியிலும் பயங்கள் உண்டு. இந்த நாட்டை சிங்களம் மட்டும், பௌத்தம் மட்டும் என படிப்படியாக மாற்றியமைக்க சிங்கள அரசியல்வாதிகள் முயல்கிறார்கள் என்று தமிழர்கள் நினைக்கிறார்கள். தமிழரை, முஸ்லிம்களை இரண்டாம், மூன்றாம் பிரஜைகளாக நடத்த சிங்கள அரசியல் தலைமை முயல்கிறது என்ற அச்சம் தமிழர் மத்தியில் உள்ளது. இதுவும் மிக, மிக நியாயமான பயம். இதை சிங்கள மக்கள் நிவர்த்தி செய்ய வேண்டும்! மனோ கணேசன் இங்கிலாந்திலுள்ள ஆனந்தியர்களிடம் விடுத்த கோரிக்கைகள் இவை.

மனோ கணேசன் இன்றுமொரு தகவலையும் சொன்னார். ‘உங்களுக்கு ஓர் உண்மை தெரியுமா? கொழும்பு தலைநகரில் ஒரு கும்பல் இருக்கிறது. அது ஒரு வகுப்பு. கொழும்பில் எந்த அரசாங்கம் நிலைபெற்றாலும், அந்த கும்பல் அந்த அரசாங்கத்தை பிடித்துக் கொள்கிறது. வாக்களித்து அரசாங்கங்களை உருவாக்கும் மக்களை விட இந்த கும்பல் அரசாங்கங்களுக்கு உள்ளே செல்வாக்குமிக்கது.

இது எல்லா அரசாங்கங்களையும் பிடிக்கும். இப்போதைய அரசாங்கத்தையும் இது பிடித்து வைத்துள்ளது. நாளை சஜித் ஆட்சிக்கு வந்தாலும், அந்த அரசாங்கத்தை இது பிடிக்கும். அந்தளவு செல்வாக்கு இந்த கும்பலுக்கு உள்ளது. இதற்கு இன, மத அடையாளங்கள் இல்லை. ஆகவேதான், அதிகாரங்களைப் பிரித்து எல்லா மாகாணங்களுக்கும் அனுப்ப வேண்டும் என நான் கூறுகிறேன். ஆகவே அதிகாரப் பகிர்வை இந்த அடிப்படையில் பாருங்கள்.’ என்றார் மனோ!

மனோவின் அரசியலில் இந்த ஊர்க்குருவிக்கு முழுமையான உடன்பாடு இல்லாவிட்டாலும், சொல்லவேண்டியதை எந்த இடத்திலும் நின்றுகொண்டு சொல்லுகின்ற அந்த துணிவு நமது தலைவர்களுக்கு இன்று தேவையான ஒன்று!. இந்தியா உதவ வேண்டும், சர்வதேசம் தலையிடவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் சொல்வதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. அது மாவீரர் தினத்தில் நின்று தமிழ்த் தேசியம் கதைப்பது போன்றது!

**- ஊர்க்குருவி.**

# நாட்டின் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ வழிகாட்டியவர் மன்னார் ஆயர்!

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் இரங்கல்!



யாழ்ப்பாணம், ஏப்.02

**நாட்டின் குடிமக்கள் சகோதரத்துவத்துடன் வாழக் கூடிய வகையில் நேரிய வழிகாட்டியாக வாழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்துச் சென்றவர் மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப்.**

இவ்வாறு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஆயரின் மறைவு குறித்து நேற்று அவர் விடுத்த இரங்கல் செய்தியில், “கத்தோலிக்க மக்களின் புனிதவாரம் அனுஷடிக்கப்படும் இந்த வாரத்தில் அவர் இறையடி சேர்ந்தமை அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஆயர் பணியில் 25 வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற போதும் அவர் வெறுமனே இறைபணியுடன் மட்டும் நின்றுவிடாது, மக்கள் பணியிலும் விசேடமாக தமிழ் மக்கள் சார்பான நலன்கள் தொடர்பில் அதீத அக்கறை காட்டியதுடன் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்களாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் நேரிய வழிகாட்டியாக வாழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்துச் சென்ற ஆண்டகை ஆவார். ஒரு மக்கள் சேவகரை, மகானை தமிழ் மக்கள் இழந்து நிற்கின்றோம்” - என்றுள்ளது. (ஐ)

## ஆண்டகையின் மறைவு ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பு

### சித்தார்த்தன் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 02

மன்னாரின் முன்னாள் ஆயர் இராயப்பு சின்னப்பு யோசப் ஆண்டகையின் இழப்பு கத்தோலிக்க சமூகத்திற்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான புளொட்டின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயரான இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவிற்கு விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் வெளியிட்டுள்ள அஞ்சலி குறிப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பது வருமாறு:

‘அரசியல் ரீதியாக எங்களிற்குள் சில விடயங்களில் வெவ்வேறு பார்வைகள் இருந்திருந்தாலும், தமிழ்மக்களின் நலன் சார்ந்த விடயங்களில், அபிவிருத்தி விடயங்களில் அவருடன் ஒன்றுபட்டு செயற்பட்டு வந்தோம்.

1994 பாராளுமன்றத்தின் வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராக செயற்பட்ட என்னிடம், வன்னி மாவட்ட மக்கள் நலன்சார்ந்த பிரச்சனைகளை, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் எடுத்து செல்லும்படி அவர் கேட்ட பல விடயங்களை நிறைவேற்றியிருக்கிறேன்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக மேற்கொள்ள வேண்டிய பல சிபாரிசுகளை அவர் அடிக்கடி வழங்குவார். முக்கியமாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகளையே அவர் குறிப்பிடுவார். அவற்றை நான் நிறைவேற்றியிருக்கிறேன். இவருடைய இழப்பு கத்தோலிக்க சமூகத்தினருக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் அனைவருக்கும் பேரிழப்பாகும்” என குறிப்பிடப்பட்டுள்ளது.



வடமராட்சி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் புதிய அதிபராக த. கலைச்செல் வன் நேற்று கடமையேற்றுக் கொண்டார்.



## 239 பயிலுநர்களுக்கு நேற்று நிரந்தர நியமனம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 02

2019 ஆம் ஆண்டு இரண்டாம், மூன்றாம் கட்டமாக பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நேற்று மாலை 3 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் 239 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் பங்கேற்றார். அவருடன், மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ,பிரதம கணக்காளர் , திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.04.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, பங்குனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## அரசியல் கைதிகளின் பரிதாப நிலை

இலங்கையின் சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், அவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில், நீதி அமைச்சு விசேட பொறிமுறையொன்றை மேற்கொள்ளவுள்ளது. இதனடிப்படையில், பல்லாயிரக்கணக்கான கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழுங்கப்படவுள்ளது. நீதி அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரின் அறிக்கை நீதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்தத் தகவலை, நீதி அமைச்சர் அலி சப்ரி அறிவித்திருக்கின்றார். ஆனால், அரசியல் கைதிகளாக வகைப்படுத்தப்பட்டிருப்பவர்கள் எவருக்குமே பொது மன்னிப்பு வழுங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

உண்மையில், பொது மன்னிப்பு என்பது ஜனாதிபதியால் வழுங்கப்படும் ஒன்று. இந்த நிலையில் பொதுமன்னிப்பிற்கான பட்டியலில் அரசியல் கைதிகளை நீதி அமைச்சு உள்ளடக்கவில்லை. அரசியல் கைதிகளாக வகைப்படுத்தப்பட்டவர்களின் நிலைமை பரிதாபகரமான ஒன்றாக மாறியிருக்கின்றது. இதற்கு உண்மையிலே யார் காரணம்? ஒரு வேளை அவர்கள் அரசியல் கைதிகளாக வகைப்படுத்தப்படாது விட்டிருந்தால், பொதுமன்னிப்பு பட்டியலில் அவர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பார்களா?

அரசியல் கைதிகள் என்னும் வகைப்படுத்தலை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அரசாங்கம் மட்டுமல்ல, நல்லாட்சி அரசாங்கம்கூட ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. கைதிகள் சிலரை விடுவிக்க நல்லாட்சி அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தபோதிலும்கூட, அவர்களை அரசியல் கைதிகளாக கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்த ரணில் அரசாங்கமே அதனைச் செய்ய இணக்காதபோது, இந்த அரசாங்கம் அதனைச் செய்யுமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?.

அரசியல் கைதிகள் என்னும் வகைப்படுத்தலை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு - அரசியல் ரீதியான அந்தஸ்தத்தை வழுங்குவதாக அமைந்துவிடலாமென்று அரசாங்கம் எண்ணக்கூடும். இவ்வாறானதோர் அச்சத்தின் காரணமாகவே ரணில் அரசாங்கம்கூட இதில் தயக்கம் காண்பித்திருந்தது. சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அரசியல் கைதிகளாக அடையாளப்படுத்தியது உண்மையில் அந்தக் கைதிகள் அல்ல. தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்தியவர்களுமே இவ்வாறானதொரு வகைப்படுத்தலுக்குள் அவர்களை கொண்டுவந்தனர். கைதிகளாக இருப்பவர்களும், தங்களின் விடுதலைக்கு இது உதவக் கூடுமென்னும் அடிப்படையில், தங்களை அரசியல் கைதிகளாக கண்பித்துக்கொண்டனர்.

ஆனால், அதுவே அவர்களுக்கு இன்று ஒரு பாரதூரமான பிரச்னையாக மாறிவிட்டது. அவர்களை அரசியல் கைதிகளாக அடையாளப்படுத்தியவர்கள், தங்களின் அரசியல் மேடைகளில் அவர்களை அவ்வப்போது தீனியாக்கிக்கொள்கின்றனர் ஆனால், அவர்களோ தொடர்ந்தும் சிறைகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இந்த நிலையில், அவர்களது விடுதலைக்காக அவர்கள் மட்டுமே இயங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்களை அரசியல் கைதிகள் என்னும் வகைப்படுத்தலிருந்து விடுவித்துக் கொள்ளவேண்டும். நாங்கள் சாதாரண கைதிகள் - எங்களுக்கும் பொதுமன்னிப்பு தாருங்கள் என்று கோருவதன் மூலம், அவர்கள் தங்களின் விடுதலைக்காக செயற்படவேண்டிய நிலைமை எற்பட்டிருக்கின்றதா?

# ஒலிக்கவேண்டிய வேளைகளில் ஓங்கி ஒலித்த குரல் ஓய்ந்தது!



- அனந்த பாலகிட்ணர் -

இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் யுத்த கெடுபிகளுக்குள்ளாகியிருந்த வேளை அவர்களின் துன்ப, துயரங்களை அரசியலுக்கப்பால் நின்று உலகறிய துணிச்சலோடு எடுத்துக்கூறியதோடு, வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக குரல்கொடுத்த ஓய்வு நிலை மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப்பின் மறைவு, தமிழ் கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்ல. வடக்கு-கிழக்கின் அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் பேரிழப்பாகவே இருக்கின்றது.

வன்னிப்பிரதேசமே, யுத்தக்கெடுபிடிகளால் மிகப்பெரும் மானிட அவலங்களோடு பாதிக்கப்பட்ட பிரதேசமாக இருந்துது. இந்நிலையில் அரசியலுக்கப்பால் நின்று, யுத்த கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், வடக்கு-கிழக்கு மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் விதத்திலும் மன்னார் பேராயராக இருந்த அதி. வண இராயப்பு ஜோசப் மிகத்துணிச்சலோடு, குரல் கொடுக்கவேண்டிய தருணங்களில் மிக ஆணித்தரமாகவே குரல் கொடுத்திருந்தார். வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் வாதிகள் பேசத் தயங்கிய விடயங்களைக்கூட பேராயர் இராயப்பு ஜோசப் துணிச்சலோடு வெளி உலகுக்கு எடுத்துக்கூறியிருந்தார்.

தமது மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்தவாறே, உள்நாட்டின் அரசியல் பிரமுகர்களுக்கு மாத்திரமல்ல. வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் யுத்த சூழலினால் தோன்றியிருந்த உண்மை நிலபரங்களை அவர் எடுத்துக்கூறுவதில் முன்னின்றார்.

**அரசியலுக்கப்பால் நின்று ஒலித்த குரல்**

அரசியலுக்கப்பால் ஒரு நடுநிலையான - அதேசமயம், முக்கியமான ஓர் ஆன்மீக பிரமுகர் என்ற ரீதியில் வண. இராயப்பு ஜோசப்பின் கருத்துக்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தன. இதன்காரணமாக அடிக்கடி அவர் தென்னிலங்கை கடும்போக்காளர்களின் கடும் விமர்சனங்களுக்குமுள்ளாகியிருந்தார். இருந்தபோதிலும், அவர் அநீதியானவற்றை சுட்டிக்காட்டுவதில் ஒருபோதும் பின்நிற்கவில்லை.

யுத்தம் மூர்க்கமடைந்திருந்த காலத்தில் போக்குவரத்துக் கெடுபிடிகள் வடக்கிற்கும் - தெற்கிற்குமிடையே நிலவிய காலத்தில் பேராயர் இராயப்பு ஜோசப் ஆன்மீக தலைவர் என்ற வகையில் தமக்கிருந்த விசேட சலுகைகளை பயன்படுத்தி, வடக்கிலிருந்து தெற்கிற்கு வருகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் மட்டுமல்ல. ஏனைய சர்வதேச நிறுவனங்களுக்கும் சென்று, வடக்கில் நிலவியிருந்த உண்மை நிலபரத்தை தெளிவாக எடுத்துக்கூறியிருந்தார். யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானவாகள் கத்தோலிக்கரல்லாதவர்களாக இருந்தபோதிலும், எவ்வித மத வேறுபாடுகளுக்கும் இடந்தராதவராக பேராயர் இராயப்பு ஜோசப் தம்மை பாதிக்கப்பட்ட மக்களின் 'ஆபத்பாந்தவனாக' வைத்திருந்தார்.

**மடுத்திருத்தலம்**

இலங்கையில் 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த மன்னார் மடுமாதா திருத்தலம் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை அதன் திருவிழாக் காலங்களில் கவர்ந்திழுக்கும் ஆன்மீக சக்தி கொண்டதாக இருக்கின்றது. பேராயர் இராயப்பு ஜோசப் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்திருந்தபோதிலும், ஆண்டுதோறும் மடுத் திருப்பதி திருவிழாவுக்காக நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வருகின்ற பக் தர்களுக்கு தனது ஆசிகளை வழுங்கி, அப் பக்தர்கள் எவ்வித இடையூறுகளுமின்றி மடு திருப்பதியில் வழிபாடு செய்வதை உறுதிப்படுத்தியிருந்தார்.


பேராயர் அதி வண இராயப்பு ஜோசப் வடக்கின் நெடுந்தீவை பிறப்பிடமாக கொண்டவர். யாழ்பாணத்தின் பேராயர்கள் பலர் வடக்கின் தீவகப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இந்நிலையில், பேராயர் இராயப்பு ஜோசப் தாம் வடபகுதி மண்ணின் மைந்தன் என்பதைக்கூட, பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் 2015ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, மன்னாரின் மடுத்திருப்பதிக்கு அவரை அழைத்துவந்து, அத் திருப்பதியின் புனிதத்துவத்துக்கு மேலும் மெருகூட்டியிருந்தார்.

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரே பரிசுத்த பாப்பரசராவார். கடந்த காலங்களில் சில பரிசுத்த பாப்பரசர்கள் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்குமுள்ளாகியிருந்த நிலையில், அவர்களது பாதுகாப்பு வெளிநாட்டுப் பயணங்களின்போது மிக அவதானத்தோடு மேற்கொள்ளப்படுகின்றது. இருந்தபோதிலும், மிக மோசமாக யுத்தத்தினால் பாதிப்புற்ற மன்னார் மாவட்டத்திலுள்ள மடுத் திருப்பதிக்கு யுத்தம் முடிவுக்கு வந்த ஆறு வருட காலத்தில் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் வருவதை உறுதிசெய்து, மடுத் திருப்பதியில் ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்களுக்கு பாப்பரசரின் ஆசீர்வாதத்தை பேராயர் இராயப்பு ஜோசப் பெற்றுக்கொடுத்தார். இதன்மூலம் வடபகுதி, இலங்கையில் ஒரு தனித்துவமான பிரதேசம் என்பதையும் பேராயர் இராயப்பு ஜோசப் உறுதிப்படுத்தியிருந்தார்.

தனது ஆன்மீக வாழ்வில் மக்கள் சேவை குறிப்பாக, அல்லல்பட்ட மக்களுக்காக ஆற்றுகின்ற சேவையே மகத்துவமான இறை சேவை என்பதை நிரூபித்து, இவ்வுலக வாழ்வை ஒரு புனிதராக நீத்துள்ளார் மன்னார் பேராயர் அதி வண. இராயப்பு ஜோசப்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 02 வெள்ளிக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி 20 புனித வெள்ளி

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 9.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | திதித்துவயம் |



## இன்றைய ராசிபலன்

02.04.2021

**மேடம்**
எதையும் கவனத்துடன் கையாளுங்கள். அதிகப் பேச்சு வேண்டாம். தனித்திறன் வெளிப்படும். அறிவுப் பூர்வமாக செயல்படுவீர்கள். அலுவலக பிரச்னைகள் தீரும். சாதகமான சூழல் நிலவும்.

**இடபம்**
புதிய வீடு, நிலம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். உங்கள் முன்யோசனை வாழ்வில் முன்னேறத் துணை செய்யும். அறிவுத்திறன் வெளிப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**மிதுனம்**
தாய், உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விலகியிருந்த நண்பர்கள் வலிய வந்து உதவி கேட்பர்.

**கடகம்**
சகோதரர்களுடன் இருந்த கருத்து மோதல்கள் நீங்கும். அதிக முயற்சியுடன் செயல்கள் முடியும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப விஷயங்களில் கவனம் தேவை. மனம் தளர வேண்டாம்.

**சிம்மம்**
வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. உற்சாகம் பெருகும். தவறான விஷயத்தில் ஈடுபட வேண்டாம். மாலையில் நன்மை நிகழும். எதையும் சமாளிக்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த கடன் கைக்கு வரும். உங்களின் செல்வாக்கு கூடும். விடா முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கையால் ஏற்பட்டிருந்த கவலை தீரும்.

**துலாம்**
பணியில் உங்களது திறமையை நிரூபிப்பீர்கள். பிறரிடம் இருந்து பாராட்டு கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டாம். புதுத்துறையில் ஈடுபாடு வந்து அதைக் கற்றுத் தேர்வீர்கள்.

**விருட்சிகம்**
வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் அதை சமாளிப்பீர்கள். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி சிரமங்களை வெல்வீர்கள். அதிர்ஷ்டம் கூடும். சிறு தடைகளை எளிதாக கடப்பீர்கள்.

**தனுசு**
நன்கு முயன்று மேலதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். அலுவலகப் பணியில் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் உணர்ச்சிவசப்பட்டு அதிகம் பேச வேண்டாம்.

**மகரம்**
அலுவலகப் பணியில் நன்கு கவனம் செலுத்து வீர்கள். முயற்சியால் எண்ணம் நிறைவேறும். சுபச் செய்தி ஒன்று வரும். நேர்மையற்ற நண்பர்களைக் கருணையின்றி விலக்குங்கள்.

**கும்பம்**
முன்னேற்றத்திற்கு உறவினர் முட்டுக்கட்டை போடக்கூடும். இன்று எதிர்பாராத இடத்திலிருந்து திடீர் வரவு உண்டு. மனதிற்கு நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்வர்.

**மீனம்**
பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்படி செயல்படுவீர்கள். பெற்றோரின் ஆரோக்கியம் முன்பைவிட நிம்மதியளிக்கும். எதைச் செய்வதற்கும் முன்பு சிந்தியுங்கள். ஆலோசனை பெறுங்கள்.

# பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி

## ஸ்டாலின் காரசாரப் பேச்சு



கோவை, ஏப். 02

இந்த ஆட்சி, பொல்லாத ஆட்சி என்பதற்கு ஒரே சாட்சி பொள்ளாச்சியில் பெண்கள் பாலியல் பலாத்காரம் சம்பவம் என தி.மு.க. தலைவர் ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவர் ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுப்பட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

பல்வேறு ஊடகங்களிலும் திமுக கூட்டணி தான் மிகப்பெரிய வெற்றி பெறும் என கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஊடகங்களை எல்லாம் ஆளும் கட்சியினர் மிரட்டுகின்றனர். எவ்வளவு மிரட்டினாலும், 4 நாளில் அவர்களின் முகமூடியை கிழிக்கப்போகிறோம். துவக்கத்தில் நான் பிரசாரம் செய்தபோது 200 இடங்களில் வெற்றிப்பெறுவோம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், இப்போது 234 இடங்களிலும் வெல்வோம் எனத் தெரிகிறது. தமிழகத்தில் ஸ்டாலின் அலை இல்லை என்கின்றனர். அலை இல்லை சுனாமியே உள்ளது.

மத்திய அரசுக்கு அடிமையாக இருப்பதே பழனிசாமியின் குறிக்கோள். இந்த அரசாங்கம் கொடை நாட்டில் கொள்ளை அடித்த, கொலை செய்த அரசாங்கம். மேலும் இந்த அரசு, உயிரைக்கொல்லக்கூடிய குட்காவில் ஊழல் செய்தது, ஜல்லிக்கட்டில் போராடிய இளைஞர்களை தாக்கி கொடுமைப்படுத்தியது, சாத்தான்குளத்தில் இருவரை லாக்கப்பில் அடித்து கொன்றது, 8 வழிச்சாலைக்கு எதிராக போராடியவர்களை தடியடி நடத்தியது, அனைத்து தரப்பினரும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக போராட வைத்தது. இந்த ஆட்சி, பொல்லாத ஆட்சி என்பதற்கு ஒரே சாட்சி பொள்ளாச்சி.

திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என பிரதமர் மோடி பேசுகிறார். பொள்ளாச்சியில் 250 இளம்பெண்களை கடத்தி அரசியல்வாதிகளின் மகன்கள், அவர்களது நண்பர்கள் கொடுமைப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இதெல்லாம் கிட்டத்தட்ட 3 ஆண்டுகளாக நடைபெற்றுள்ளது. இதனை இந்த அரசு மூடி மறைத்துள்ளது-என்றார்.

## அரசியலில் எனது பலம், தந்திரம் இரண்டுமே நேர்மைதான்- கமல்



சென்னை, ஏப். 02

அரசியலில் எனது பலம் மற்றும் தந்திரம் இரண்டும் நேர்மைதான் என மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஹாசன் தெரிவித்தார்.

இதுகுறித்து கோவையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

எங்கள் கட்சியில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்தால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் உருவானதே மக்கள் நீதி மய்யம். அது இன்னும் கட்டுமானத்தில்தான் உள்ளது. நான் ஒரு அரசியல்வாதியின் மகன். 1947 க்கு முந்தைய காலகட்ட அரசியல்வாதி எனது தந்தை. இதுதான் அரசியல் என்றிருந்த காலத்தில், அதுவாகவே கற்பிக்கப்பட்டு வளர்ந்தவன் நான். அப்போது இருந்ததுதான் அரசியல். தற்போது இருப்பதெல்லாம் எனக்கு தெரிந்து நரித்தந்திரம். அக்காலத்து அரசியலை நாம் மீட்டெடுக்க வேண்டும். இதனால் அரசியல் எனது கடமையாக மாறியுள்ளது. அரசியலில் எனது தந்திரம், பலம் இரண்டும் நேர்மைதான்-என்றார்.

## பா.ஜ.கவின் பினாமி ராமதாஸ்!

### திருமாவளவன் குற்றச்சாட்டு



சென்னை, ஏப். 02

பா.ஜ.கவின் பினாமியாக பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளார் என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் குற்றம் சாட்டியுள்ளார்.

காட்டுமன்னார் கோவி லில் விடுதலைச் சிறுத்தை கள் வேட்பாளரை ஆதரித்து திருமாவளவன் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், "அதிமுக, பாமக ஆகிய கட்சிகளின் தோள்களில் ஏறிக் கொண்டு பா.ஜ.க தமிழகத்தில் நுழையப் பார்க்கிறது. பாஜகவின் பினாமியாக பாமக தலைவர் ராமதாஸ் உள்ளார். ராமதாஸ் நீர்த்துப் போய்விட்டார். சமூக நீதியின் காவலராக வேல்முருகன் உருவாகிறார். அவருக்குத்தான் இனி எதிர்காலம்-என்றார்.

## தாய்மையை மதிக்க தெரியாத தி.மு.க!

### அன்புமணி காட்டம்



சென்னை, ஏப். 02

'பெண்களையும், தாய்மையையும் மதிக்க தெரியாத கட்சி தி.மு.க.,' என சின்னசேலத்தில் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டசபை தொகுதி பா.ம.க., வேட்பாளர் டாக்டர் ராஜாவை ஆதரித்து சின்னசேலத்தில் அவர் உரையாற்றுகையில்-

தமிழகத்தில் 70 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு விவசாயி முதல்வராக உள்ளார். பழனிசாமி மீண்டும் முதல்வராக வேண்டும். சங்கராபுரம் பா.ம.க. வேட்பாளர் ராஜா, எளிமையான குடும்பத்தில் பிறந்தவர். மருத்துவம் படித்த, தொலைநோக்கு சிந்தனை உடைய இளைஞர். கள்ளக்குறிச் சியை தனி மாவட்டமாக அறிவிக்க கோரி முதன்முதலாக குரல் கொடுத்தவர் ராஜா. தி.மு.க., வேட்பாளர் உதயசூரியன், பல முறை வெற்றி பெற்றும், தொகுதிக்காக எந்த திட்டத்தையும் செய்யவில்லை. இதனால் இம்முறை மக்கள் பா.ம.கவை ஆதரிக்கின்றனர். தி.மு.க. வேட்பாளர் உதயசூரியனுக்கு கட்ட பஞ்சாயத்து, ரவுடியிசம் தான் தொழில். இவர் மட்டுமல்ல, தி.மு.க. என்றாலே ஆக்கிரமிப்பு, நில அபகரிப்பு தான். தி.மு.க. தலைவர் ஸ்டாலின் ஒரு அரசியல் வியாபாரி.

விவசாயம், சமூகநீதி, சமத்துவம், மக்களின் கஷ்டம், கணக்கு, வரலாறு என எதை பற்றியுமே தெரியாதவர் ஸ்டாலின். முதல்வர் பழனிசாமி இயல்பானவர், யார் வேண்டுமானாலும் பார்க்கலாம், பேசலாம். ஆனால், ஸ்டாலின் பக்கத்தில் தி.மு.க., கட்சியினரே நெருங்க முடியாது. தி.மு.க., பெண்களையும், தாய்மையையும் மதிக்க தெரியாத கட்சி. அந்த கூட்டணி அப்படிப்பட்டது. சமீபத்தில் தி.மு.க., கொள்கை பரப்பு செயலாளர் ஆ.ராசா, முதல்வரின் தாயை பற்றி கொச்சையாக பேசியுள் ளார். பெண்களை தெய்வங்களாக வணங்கும்பூமி இது. குடும்பத் தலைவிகளின் நலனுக்காக அ.தி.மு.க., அரசு பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை அளித்துள்ளது. பின்தங்கியுள்ள சங்கராபுரம் தொகுதி வளர்ச்சியடைய, ராஜாவுக்கு மாம்பழம் சின்னத்தில் வாக்களியுங்கள்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அரசால் 1000 ரூபா பெறுமதியான நிவாரணப்பொதி

கொழும்பு, ஏப்.02

அத்தியாவசியப் பொருள்கள் 12 உள்ளடங்கலான நிவாரணப் பொதியொன்றை ஆயிரம் ரூபா பெறுமதிக்கு சதொச விற்பனை நிலையத்தினூடாக நேற்று முதல் பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில -

பொதுமக்களுக்கு புத்தாண்டுக் கொடுப்பனவொன்றாக இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நிவாரணப் பொதியில் பச்சை அரிசி ஒரு கிலோ கிராம், சிவப்பு அரிசி ஒரு கிலோ கிராம், நாட்டரிசி ஒரு கிலோ கிராம், வெள்ளை சீனி



ஒரு கிலோ கிராம், பருப்பு ஒரு கிலோ கிராம் மற்றும் கோதுமை மா ஒரு கிலோ கிராமும் உள்ளடக்கப்பட் டுள்ளது.

அத்துடன் உப்பு ஒரு பைக்கற், நெத்தலி 250 கிராம், சோயா மீட் ஒரு பைக்கற், துண்டு மிளகாய் ஒரு பைக்கற், தேயிலை ஒரு பைக்கற் மற்றும் முகக் கவசமொன்றும் இப்பொதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது - என்றார்.

(எ)

# நுவரெலியா - வெலிமடை வீதியில் கோர விபத்து

## மூன்று பெண்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 02

நுவரெலியா - வெலிமடை பிரதான வீதியின் ஹக்கலை பகுதியில் இடம் பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியாவில் இருந்து எல்ல நோக்கி பயணித்த ஓட்டோ மீது முன்னால் பயணித்த கனரக வாகனம் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கனரக வாகனம் ஒன்றின் தடுப்புத் தொகுதி செயற்படாமல் போனதால், இவ்வாறு ஓட்டோ மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த பெண்கள் மூவர் உயிரிழந்துள்ளதுடன், அதன் சாரதி காயமடைந்த நிலையில், நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# "ஏப்ரல் 10 - 20 ஆம் திகதி வரை அதிக விபத்துக்கள் சம்பவிக்கும்"

கொழும்பு, ஏப்.02

இலங்கையில் அதிகளவான வாகன விபத்துக்கள் சம்பவிக்கும் மாதமாக ஏப்ரல் மாதம் கருதப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாரளர், பிரதிப் பெலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதிலும் குறிப்பாக ஏப்ரல் 10 முதல் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அதிகளவான விபத்துக்கள் சம்பவிக்கக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் வீதிப் போக்குவரத்து விதிகளை சாரதிகள் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் பதிவான விபத்துக்களில் ஐவர் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

(எ)

# தனது காணியை மக்களுக்கு வழங்க சங்கரி நடவடிக்கை!

கிளிநொச்சி, ஏப். 02

சுதந்திரபுரத்தில் அமைந்துள்ள தனது காணியினை அரசாங்கத்திடம் கையளிக்கும் பத்திரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி ஒப்பிமிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் வீ. ஆனந்த சங்கரிக்கு 15 ஏக்கர் மத்திய வகுப்பு காணியாக இருந்தது.

குறித்த காணியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியேறி வசித்த வந்த நிலையில் அந்தக் காணியை தமக்கே பகிர்ந்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தக் காணியை மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு ஆனந்த சங்கரி எழுத்துமூலமான கோரிக்கையை பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபரிடம் முன்வைத்தார்.

கொவிட் பரவல் காரணமாக குறித்த நடவடிக்கை மந்த கதியில் இடம்பெற்று வந்த நிலையில் அக்காணியை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், நேற்று வியாழக் கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆனந்தசங்கரியின் இல்லத்திற்கு சென்ற பிரதேச செயலகக் காணி அலுவலக உத்தியோகத்தர்கள், பகிர்ந்தளிப்பு செய்வது தொடர்பில் பேசியிருந்ததுடன், மத்திய வகுப்பு காணியை அரசாங்கத்திடம் பராமரிப்பதற்கான ஆவணத்தையும் வழங்கியிருந்தனர்.

அந்த ஆவணத்தில் கையொப்பமிட்ட ஆனந்தசங்கரி, அவற்றை உரிய முறையில் மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

குறித்த காணிகள் அரச காணியாக்கப் பட்டதன் பின்னர் அப் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்,

3 மாத கால அவகாசத்துக்குள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

குறித்த காணி பகிர்ந்தளிப்பு நடவடிக்கையை துரிதப்படுத்தி, மத்தியவகுப்பு காணி என்பதற்காக வீட்டுத்திட்டங்களை இழந்து நிற்கும் மக்களுக்கு வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும், இயலுமானவரை மக்களின் கரங்களுக்கு குறித்த காணி விரைவாக கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறும் வினயமான கோரிக்கையை அவர் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# சஹ்ரானின் கருத்துக்களை பரப்பிய இருவர் கைது!

கொழும்பு, ஏப்ரல் 02

சமூக வலைத்தளங்கள் ஊடாக அடிப்படைவாத மற் றும் சஹ்ரான் ஹாஷிமின் கொள் கைகளை பரப்பியமை தொடர்பில் இரண்டு பேர் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊட கங்களுக்கு வெளியிட்டுள்ள காணொலிப்பதிவிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தது வருமாறு:

"சமூக வலைத்தளங்கள் ஊடாக அடிப்படைவாத மற்றும் சஹ்ரான் ஹாஷிமின் கொள்கைகளை பரப்பியமை தொடர்பில் இருவர் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளனர். வெல்லம்பிட்டிய மற்றும் திஹாரி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 31, மற்றும் 32 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கட்டாரில் பணி புரிந்த குறித்த இருவரும், இலங்கையர்களை உள்ளடக்கிய வட்ஸ் அப் குழுமம் ஒன்றை ஆரம்பித்து, அதில் சஹ்ரானின் கொள்கைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைவாத மற்றும் வஹாபிஸ கருத்துகளை பதிவிட்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை யிலிருந்து உரிய அதிகாரிக ளால், கட்டார் அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, கடந்த வருடம் நவம்பர் மாதம் 21ஆம் திகதி அவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அத னைத் தொடர்ந்து பயங்கரவா புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அது தவிர, அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய மூதூர் பிரதேசத்தில் வைத்து மேலும் இரு சந்தேகநபர்களும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மூதூரைச் சேர்ந்த 37, 38 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கடந்த 2018 இல் க.பொ.த. சாதாரண தர பரீட் சைக்கு தோற்றிய முஸ்லிம் மாணவர்களுக்கு, சஹ்ரானை பின்பற்றுபவர்களினால் பல் வேறு வகுப்புகளை நடாத்த வசதிகளை வழங்கியதாகவே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களில் ஒருவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து ஒரு சில மணித்தியாலங்களுக்கு பின்னர், சஹ்ரான் ஹாஷிம் தனது குழு வினருடன் (சத்தியப்பிரமாணம்) செய்யும் காணொளி மற்றும் புகைப்படத்தை இணையத்தில் பதிவிட்டுள்ளமை தெரிய வந் துள்ளது. அது தவிர பல்வேறு அடிப்படை வாத கருத்து களைக் கொண்டகாணொளிகள் மற்றும், புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதி விட்டு வந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதோடு, குறித்த சந்தேக நபர்கள், பயங்கராவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண தேர்தலில் தனிவழி செல்ல தமிழ் முற்போக்குக் கூட்டணி தயார்

கொழும்பு, ஏப். 02

**“எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் களமிறங்குவதற்கு எதிர்ப்பார்ப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.”-என்று முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் தெரிவித்தார்.**

கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் பங்கேற்றிருந்த வேலுகுமார் எம்.பியிடம், ‘மாகாணசபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் நடத்தி முடிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. அதற்கான சட்ட ரீதியான தடைகளை தகர்ப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெறுகின்றன. எனவே, குறித்த தேர்தலை எதிர்கொள்வதற்கு உங்கள் கட்சி - கூட்டணி தயாரா?” - என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

‘தேர்தல் என்பது ஜனநாயகத்தின் - மக்கள் ஆட்சியின் பிரதான அங்கம். வாக்களிப்பு என்பது மக்களுக்கான உரிமை. அந்த வகையில் எந்நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட விரும்புபவர்கள், எதிர்ப்பார்ப்பவர்களிடமிருந்து எமது கண்டி மாவட்ட கட்சி அலுவலகம் விண்ணப்பங்களை கோரியுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில் எமது அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு பொருத்தமான, தகுதியான வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். வெற்றிகரமாக தேர்தலை எதிர்கொள்வதற்கு அவர்கள் தயார்படுத்தப்படுவார்கள். ” - என்றார். அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணி தனித்து போட்டியிடுமா அல்லது ஐக்கிய மக்கள் சக்தியாகவா களமிறங்கும்? என எழுப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு,

‘அரசியல் சூழ்நிலை - களநிலைவரம் உட்பட முக்கிய சில விடயங்கள்தொடர்பில்ஆராய்ந்து வருகின்றோம். தேர்தலுக்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவந்த பின்னர், எமது கட்சி, கூட்டணியின் உயர்பீடம்கூடி- மக்கள் பக்கம்நின்று உரிய முடிவை எடுக்கும்.”-என்றார் வேலுகுமார் எம்.பி.



# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் பாற்பண்ணை மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 02

கொரோனா அபாயம் காரணமாக முடக்கப்பட்டுள்ள திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்திற்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

குடும்பம் ஒன்றுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 100 அத்தியாவசிய உலருணவுப் பொதிகளே நேற்று வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன் சுவாமிகளால் உதவிப்பொருட்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

# காடழிப்பை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜே.வி.பி கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

நாட்டில் இடம்பெறும் காடழிப்பை உடனே தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காடழிப்பு உட்பட அனைத்து குற்றச்சாட்டுகளிலும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தன்னை நீக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வர உதவிய மகா சங்கமும் அறிவுசார் குழுக்களும் இப்போது ஜனாதிபதியை விட்டு விலகியுள்ளனர்.

மேலும் காடழிப்பு இடம்பெறுவதாக பெரும்பான்மையான குருமார்கள், அரசு அதிகாரிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் ஜே.வி.பி என பலரும் குரல் எழுப்பும்போது இது போன்ற பேரழிவு எதுவும் இல்லை என்று கூறுகிறார்கள்.

இந்நிலையில் எது எவ்வாறாயினும் காடழிப்பு செயல்பாடுகளை தடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

# லெபனானில் சிக்கித் தவித்த 177 பேர் இலங்கை வந்தனர்!

கொழும்பு, ஏப். 02

லெபனானில் வேலைவாய்ப்புக்காக சென்ற நிலையில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்ட 177 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் அதிகாலை 3.45 மணிக்கு சிறப்பு இலங்கை ஏயார்லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலோர் வீட்டுப் பணியாற்றும் பெண்களாவர்.

அவர்கள், இலங்கை இராணுவத்தால் இயக்கப்படும் மையங்களில் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(அ)

# அடுத்த இரு வாரங்களுள் ஸ்பூட்னிக்-வி கிடைக்கும்

கொழும்பு, ஏப். 02

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்பூட்னிக்-வி கொரோனா தடுப்பூசி இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் இலங்கையை வந்தடையும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டில் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி, சினோபோர்ம் மற்றும் ஸ்பூட்னிக்-வி ஆகியவை இந்த மாத இறுதிக்குள் பயன்பாட்டுக்கு கிடைக்கும் என கூறினார்.

அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படுவதாக உலகம் முழுவதும் பதிவாகின்றபோதும் இலங்கையில் பக்க விளைவுகள் குறைவாகவே காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

குறித்த தடுப்பூசி தொடர்பான ஆராச்சியை அனைத்து தரப்பினரும் மேற்கொண்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசியின் 600,000 டோஸ் ஆரம்பத்தில் நாட்டில் உள்ள சீனர்களுக்கு வழங்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அவசரகால பயன்பாட்டிற்காக சினோபோர்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு இன்னும் அங்கீகாரம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பலமான சக்தியாக நாம் இயங்கினாலே தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை

## அருட்தந்தை மா.சத்திவேல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 02

நாம் ஒரு பலமான சக்தியாக இயங்காத வரைக்கும் அரசியல் கைதிகள் அகதிகள் தான் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், அரசியல் அகதிகள் இன்று அரசியல் அநாதையாக்கப்பட்டி ருக்கின்றார்கள். இதற்கான காரணம் ஒட்டுமொத்த அரசியல் தமிழ்த்தலைமைகளுமே! சிவில் சமூகங்கள் பொறுப்பேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதாவது அரசியல் கைதிகளின் பிரச்னை தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை. குறிப்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் தீர்த்திருக்கலாம். ஆனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் இதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை.

தமிழ் அரசியல் தலைமைகளால் கொடுக்கப்பட்ட எந்த வாக்குறுதியும் இதுவரை நிறை



வேற்றப்படவில்லை. இந்த அரசியல் தலைமைகள் கொரோனாவை காரணம் காட்டுகிறார்களே தவிர அரசியல் கைதிகளை பார்ப்பதனையோ, அன்றாட தேவைகளையோ கவனிப்பதும் இல்லை.

அரசியல் கைதிகள் என அடையாளப்படுத் தப்படுபவர்கள் தான் முன்னொரு காலத்தில் அரசியலை முன் நகர்த்தியவர்கள். இவர்கள் பலமாக இருந்ததனால் தான் பேச்சுவார்த்தை முன்னர் நடந்திருந்தது. இவ்வாறு பலமாக இருந்ததனால் வெவ்வேறு நாடுகளில் பேச்சு நடத்தினார்கள். அந்தளவு ஒரு பலமான சக்தியாக இருந்த அரசியல் கைதிகளை தான் இன்று யாரும் கண்டுகொள்ளாத நிலையில் அநாதைகளாக கைவிடப்பட்ட நிலையில் அகதிகளாகவே இருக்கிறார்கள்.

தற்போது இருக்கும் அரசாங்கம் அரசியல் கைதிகளே இல்லை என கூறுகின்றார்கள் என்றால் அவர்களுக்கான விடுதலையே இனி இல்லை. இந்த அரசியல் கைதிகள் இருக்கும் வரைக்கும் இந்த பயமுறுத்தல்கள் இருந்து கொண்டே தான் இருக்கும்.

அண்மையில் பெருந்தோட்ட துறையில் இடம்பெற்ற ஒரு போராட்டத்தில் கைது செய்யப்பட்டவரைக்கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறார்கள். அப்படியானால் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் இனிமேல் நீக்கப்படுவதும் இல்லை. அரசியல் கைதிகளுக்கான விடுதலை நடைபெறப்போவதுமில்லை.

அரசியல் கைதிகள் தமது கோரிக்கையை, அரசாங்கத்திடம் வைப்பதா? அரசியல் தலைமைகளிடம் வைப்பதா? சிவில் சமூகத்திடம் வைப்பதா? பொது மக்களிடம் வைப்பதா? என தெரியாது அரசியல் அகதியாகவும், அரசியல் அநாதைகளாகவும் இருக்கின்றார்கள்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இராயப்பு ஆண்டகையின் திருவுடல் யாழ்.ஆயர் இல்லத்தில் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், ஏப்.02

மறைந்த ஓய்வு நிலை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

சிற்றாலயத்தில் அரசியல் பிரமுகர்கள், மதகுருமார், சமூக ஆர்வலர்கள் மறைந்த ஆயருக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று திருவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயரின் இறுதி யாத்திரைத் திருப்பலி திங்கட்கிழமை மாலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நேற்று காலை காலமானார். ஆயரின் திருவுடல் யாழ்ப்பாணம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இன்று மதியம் மன்னாருக்கு அவரது திருவுடல் எடுத்துச்செல்லப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை அவரது இறுதி யாத்திரைத் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

## இராயப்பு ஆண்டகையின் மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்

### இரா.சம்பந்தன் இரங்கல்

கொழும்பு, ஏப். 02

ஆண்டகை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மக்களின் உரிமைக்குரலாக பல தசாப்தங்களாக திகழ்ந்தவர். மக்களோடு மிகவும் நெருங்கிப்பழகிய ஆயர் அவர்கள் தமிழ் மக்களின் இக்கட்டான அனைத்து கட்டங்களிலும் தாம் நேசித்த மக்களுக்காக முன்னின்று போராடிய ஒருவராவார். இன மத மொழிகளிற்கப்பால் சாதாரண மக்களின் உரிமைகளுக்காக எவ்வித தயக்கமும் பாரபட்சமும் இல்லாமல் அயராது பணியாற்றிய ஒரு தலைவரை இன்று நாம் இழந்துள்ளோம் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் உரிமைகளுக்காக போராடிய மறைந்த ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்களின் பிரயத்தனங்கள் மெய்ப்படவேண்டும் என நாம் இறைவனை பிரார்த்திப்பதோடு, ஆண்டகையின் மறைவால் துயறுற்றிருக்கும் அவரது உறவினர்கள் திருச்சபை மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்-என்றார்.

## தமிழருக்காக ஒலித்த ஒரு ஆன்மீக குரல் மௌனித்தது

### சுரேஷ் அஞ்சலி

மன்னார் மறைமாவட்ட ஆயரும் தமிழ்த் தேசியத்தின் மீது அளவிலா பற்றுக்கொண்டவருமான இராயப்பு ஜோசப் அவர்களின் மரணம் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்றும் தமிழ் மக்களின் விடியலுக்காகக் குரல் கொடுத்து வந்த ஒரு ஆன்மீகக் குரல் மௌனித்து விட்டது என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆயருக்கு அஞ்சலி செலுத்தி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

“ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களின் மரணம் என்பது தமிழ் மக்களை மீளாத்துயரில் ஆழ்த்தியிருக்கின்றது. தமிழ் இனத்தின் குரலாக தமிழ் தேசத்தின் குரலாக தனது இறுதிவரை ஒலித்து வந்தவர். தமிழ் இனத்தின் மீதும் தமிழ் மொழியின் மீதும் நீங்கா பற்றுகொண்ட துணிச்சல் மிக்க ஒரு போர்வீரனாகத் திகழ்ந்தவர். தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர்.

அன்னாருக்கு எனது சார்பாகவும் எமது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவரது பிரிவால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தினருடனும் திருக்குடும்பதினருடனும் கத்தோலிக்க சமூகத்தினருடனும் மன்னார் மறைமாவட்ட மக்களுடனும் எமது துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.”

## ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பு

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 02

பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும், தமிழ் தேச மக்களுக்கும் ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

பேராயரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

முன்னாள் மன்னார் மறைவாட்ட பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். ஈழத் தமிழரின் உரிமைக்கான போராட்ட காலத்திலும், போர் நிறைவுபெற்றதன் பின்னரும், ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் மக்களின், பலமான குரலாக செயபட்ட பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும், தமிழ் தேச மக்களுக்கும் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும்.

அரசு தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை இன அழிப்பு யுத்தம் மூலம் 2009 மே 18 இல் முடிவுக்கு கொண்டு வந்த பின்னர், தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்க முயன்றபோது, தமிழ்த் தேசத்தில் நடைபெற்ற இனவழிப்புக்கு நீதியைக் கோரி, சர்வதேச பொறுப்புக்கூறலை எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி வலியுறுத்தி, தமிழ் சிவில் சமூக அமையத்தினூடாக ஆண்டகை தலைமையை வழங்கியிருந்தார்.

குருத்துவத்தின் புனிதத்தையும், மேன்மையையும் தாங்கி, ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் உண்மையானதும் நீதியானதுமான பொறுப்புக் கூறலுக்காக, பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆண்டகையின் வெற்றிடத்தை நிரப்புவது என்பது கடினமான பணியாகும். ஈழத்து திருச்சபையின் பணியாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை ஆண்டகையின் வாழ்வும் குருத்துவமும் எடுத்துக்காட்டியுள்ளது.

யேசுக்கிறிஸ்து பணிக்குருத்துவத்தை நிறுவியதை நினைவு கூரும், புனித வியாழன் நாளாகிய இன்று(நேற்று) மேதகு ஆண்டகை அவர்களும் தனது தலைமைக் குருவின் திருப்பாதம் நாடிச்சென்று அமைதியில் உறங்குகின்றார்.

மேதகு ஆண்டகையின் பேரிழப்பால் துயருறும் கத்தோலிக்க திருச்சபையினதும், அவரது குடும்பத்தினரதும் துயரில் ஈழத் தமிழ் மக்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாமும் பங்குகொள்கின்றோம்.

இறைவனின் உன்னத திருப்பாதம் நாடிச்சென்ற ஆண்டகை, இறைவனின் அருகில் இருந்து, விடுதலைக்காக ஏங்கும் தமிழ் தேச இனத்துக்காக பரிந்துபேசி, எமக்கான சக்தியை வழங்குபவராக தொடர்ந்தும் இருப்பார் என்னும் நம்பிக்கை எமக்குண்டு-என்றுள்ளது.

## இறந்த இராயப்பு ஆண்டகைக்காக திங்களன்று வடக்கு-கிழக்கில் துக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 02

எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு-கிழக்கில் கறுப்புக் கொடி கட்டி ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செலுத்துமாறு சிறிதரன் எம்.பி அழைப்பு விடுத்துள்ளார்.

ஓய்வு நிலை மன்னார் ஆயரின் மறைவு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசிய மண்ணிலே தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அவர்களின் வாழ்வுக்காகவும் ஒரு நீண்ட பெரும் பாதையில் தனது ஆழமான பங்கை ஆத்மார்த்தமாகவும் உணர்வாகவும் வெளிப்படுத்திய ஆன்மா ஒன்று மீளாத்துயரில் உறங்கிக்கொண்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மீதும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும் அதிகமான பற்றுக்கொண்ட ஒரு மனிதனாக நின்று தன்னை அர்ப்பணித்து இன்று உறக்கம் கொள்கின்ற அவரை நினைக்கும்போது நெஞ்சம் துடிக்கின்றது.

இப்படியான ஒரு ஆயர் இனி கிடைப்பாரா என்பது சந்தேகமே. தமிழ் மக்களின் உரிமைக்காக-வாழ்வுக்காக-வாழ்வாதாரத்துக்காக-இருப்புக்காக குரல் கொடுத்த ஒரு மனிதன்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சென்று மிகத் துணிச்சலோடு ஆதாரத்தோடு ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணாமல்போய் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை வெளிப்படையாக சொன்ன ஒரு மனிதர்.

நெடுந்தீவில் பிறந்திருந்தாலும் வடக்கு-கிழக்கு தாயகம் எங்கும் வாழும் ஒவ்வொரு தமிழர்கள் மீதும் தமிழ் மண் மீதும் உறுதியான ஒரு பற்றுக் கொண்ட ஒரு மனிதனை தமிழ் மக்கள் இழந்து தவிக்கிறார்கள்.

அவருடைய இறுதி யாத்திரைத் திருப்பலி இடம்பெறும் நாளான எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு-கிழக்கு எங்கும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் கறுப்பு கொடிகள் பறக்கவிட்டு அஞ்சலி செலுத்துமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நான் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென் தமிழ்நாடு அரசியல் எப்படி உள்ளது? தொழில் வளர்ச்சி சிக்கல் என்ன செய்யும்?

ஏ.ஆர்.மெய்யம்மை - பிபிசி தமிழுக்காக

(நேற்றைய தொடர்ச்சி)

சமீபத்தில் மதுரையில் பேசிய திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் தான் ஆட்சிக்கு வந்தால் எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

**நிறைவேறாத கடல் சார்ந்த திட்டங்கள்**

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் 2005ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சேது சமுத்திர கால்வாய் திட்டம் பாஜக அரசால் மூழ்கடிக்கப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். பாக் நீரிணை பகுதியை ஆழப்படுத்தி, இந்தியப் பெருங்கடலில் இருந்து செல்லும் கப்பல்கள், இலங்கையை சுற்றாமல், சேது கால்வாய் வழியாக வங்கக் கடலுக்கு செல்ல ஏற்றதாக மாற்றும் திட்டமே இத்திட்டம். பாஜக தலைவர் சுப்பிரமணியன் ஸ்வாமி தாக்கல் செய்த மனுவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்த பின் இக்கடல் பகுதியை ஆழப்படுத்தும் பணி செப்டம்பர் 2007 ம் ஆண்டு நிறுத்தப் பட்டது. இதற்காக சேது சமுத்திரம் கார்பரேஷன் ரூபாய் 850 கோடி செலவிட்டுள்ளது.

பாஜக அரசால் 2016 ம் ஆண்டு ரூபாய் 27,570 கோடியில், பெரிய சரக்கு கப்பல்களை கையாள்வதற்காக, முன்மொழியப்பட்ட குளச்சல் துறைமுகத் திட்டத்திலும் முன்னேற்றம் இல்லை. சில மீனவ சங்கங்களின் எதிர்ப்பும், கேரள அரசின் எதிர்ப்பும், அதானி குழுமத்தினரால் 35 கி.மீ தொலைவில் கேரளாவில் உள்ள விழிஞ்ஞத்தில் அமைக்கப்படும் துறைமுகமுமே இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

தென் தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் மத்திய, மாநில அரசுகள் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயல்படுவதாகக் குற்றம் சாட்டுகிறார் ரத்தினவேல்.

முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் முயற்சியில் கொண்டு வரப்பட்டு 2001-ம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மு. கருணாநிதியால் அடிக்கல் நாட்டப்பட்ட நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலம் முடங்கிய நிலையிலேயே இருக்கிறது. போதிய அளவு நிலங்கள் கையகப் படுத்தப்பட்டதை தொடர்ந்து, 2007-ம் ஆண்டு மத்திய அரசு இதை செயல் பாட்டுக்கு கொண்டுவர ஒப்புதல் வழங்கியது. இத்திட்டதால் 70,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் போதிய கட்டமைப்பு, போக்குவரத்து, தண்ணீர், மின்சார வசதிகள் அரசாங்கத்தால் செய்து தரப்படாததால் இத்திட்டம் தொடக்க நிலையிலேயே தேங்கி நிற்கிறது.

**சிவகாசி பட்டாசு தொழிற்சாலைகளின் கோரிக்கை**

தேர்தலை முன்னிட்டு விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் பட்டாசுத் தொழிலை மாசு ஏற்படுத்தாத தொழில் என்று அறிவிக்குமாறும், தேசிய விடுமுறை தினங்களில் மக்கள் பட்டாசு வெடித்து கொண்டாடுவதற்கு தடை விதித்தல் கூடாது என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'எட்டு லட்சம் தொழிலாளர்கள் நம்பியிருக்கும் பட்டாசு தொழில் பாதிப்படையாமல் இருக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள் 3 மற்றும் 3 (பி) யிலிருந்து பட்டாசுத் தொழிலுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளோம். ஜல்லிக்கட்டுக்கு எப்படி அரசு காளைகளை காட்சிப் பொருள் பட்டியலிலிருந்து நீக்கி அனுமதி கொடுத்ததோ, அதே போன்று உரிய சட்ட திருத்தம் கொண்டு வந்து பட்டாசுத் தொழிலுக்கும் தளர்வு அளிக்க வேண்டும். சென்ற ஆண்டு கொரோனா காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக தீபாவளியின் போது பட்டாசு வெடிப்பதற்கு ஏழு மாநிலங்கள் தடை விதித்தன. தேசிய விடு முறைகளில் கொண்டாட் டங்களுக்கு தடை கூடாது என்றே சர்வதேச கூட்டமைப்பு சட்டம் சொல்கிறது. அதை சுட்டிக் காட்டி இனிவரும் காலங்களில் மாநில அரசுகள் விழாக்களில் பட்டாசு வெடித்து கொண்டாட அனுமதி மறுக்கக் கூடாது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் அதிமுக மற்றும் பாஜகவிடம் முன்வைத்துள் ளோம்," என்கிறார் தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் வெடி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். கணேசன்.

விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 1,070 பட்டாசு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. நேரடியாக மூன்று லட்சம் பேரும், மறைமுகமாக ஐந்து லட்சம் பேரும் இத்தொழிலை நம்பி இருக்கின்றனர்.

**பெருகும் ஸ்டார்ட்அப் கலாசாரம்**

சமீபகாலமாக தென் பகுதியைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் தொழில் முனைவில் ஆர்வம் காண்பிப்பதை பார்க்க முடிகிறது. இது பொதுவாக சென்னையிலும், மேற்கு மாவட்டங்களிலும் காணப்படும்.

'அரசாங்கத்தின் உறுதுணை இல்லாமலேயே இது நடக்கிறது. இந்த ஸ்டார்ட்அப் கலாச்சாரம் உருவாக பல காரணிகள் உள்ளன. கல்வி, ஊடகங்களின் மூலம் நடக்கும் அறிவுப் பரிமாற்றம், டிஜிட்டல் பொருளாதாரம் போன்றவை அதில் அடங்கும். இது தன்முனைப்பால் உருவான மாற்றம் என்றே சொல்லலாம். இதற்கு அரசாங்கம் ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும்," என்கிறார் ரத்தினவேல்.

ஆனால் நேட்டிவ்லீட் என்னும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் அமைப்பை நடத்தும் ரா. சிவராஜா கூறும்போது தொழில் முனைவு கலாசாரத்தை உருவாக்க மாநில அரசின் சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சகத்தின் மூலம் நிதி மற்றும் மானியம் கிடைப்பதாக கூறுகிறார். ஆனால் உள்கட்டமைப்பு இருந்தும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் பல சமீபகாலமாகச் சென்னைக்கு இடம் பெயர்வதாகச் சொல்கிறார்.

**அரசியல் உறுதியின் தேவை**

தென் தமிழகத்தில் 90களில் சாதிக் கலவரங்கள் தலைவிரித்தாடிய போது, அதற்கு காரணம் வேலைவாய்ப்பின்மை, அதை தடுக்க வேண்டுமெனில் இங்குள்ள மக்களின் சமூகப் பொரு ளாதார நிலையில் வளர்ச்சி வேண்டும் என்று நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் தலைமையிலான குழு பரிந்துரைத்தது. பெரிதாக சாதிக் கலவரங்கள் அண்மையில் ஏற்படாவிட்டாலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் தொழில் வளர்ச்சியில் தென் மாவட்டங்கள் பின்தங்கியே இருக்கின்றன. இதற்கு அரசியல் உறுதி இல்லாததே காரணம் என்று கூறுகின்றனர் தொழில் வர்த்தக சங்கத்தினர்.

தென் மாவட்டங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கி இருப்பதையும், குறிப்பாக ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்ட மதுரை - தூத்துக்குடி பெருவழிச்சாலை திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பது பற்றியும் அமைச்சரும் மதுரை மேற்கு தொகுதி அதிமுக வேட்பாளருமாகிய செல்லூர் ராஜூவிடம் கேட்டபோது, 'தென் மாவட்டங்கள் வளர்ச்சி பெறவில்லை என்று சொல்வது சரியல்ல. தொழில் பெருவழிச்சாலையை பொருத்தமட்டில் அரசு தொழில் தொடங்கும் இடத்திற் கான பத்திரப் பதிவிற்கு 50 விழுக்காடு மானியம் வழங்குகிறது. முதலீட்டிற்கு 25 விழுக்காடு மானியம் வழங்குகிறது. ஆனால் தொழில் துவங்க யாரும் முன்வரவில்லை. காரணம் தண்ணீர் பற்றாக்குறை. அதை தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது," என்று கூறினார்.

**தேர்தலில் மனித உரிமை மீறல் சம்பவங்களின் தாக்கம்**

தூத்தூக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடவேண்டும் என்று வலியுறுத்தி நடந்த போராட்டத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட் டில் குறைந்தது 13 பேர் கொல்லப்பட்டனர்.

சாத்தான்குளம் காவல் நிலையத் தில் தந்தை-மகன் இருவரும் காவலர்க ளால் துன்புறுத்தப்பட்டு இறந்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த இரு சம்பவங்களும் ஏப்ரல் 6, 2021 தேர்தலில் எதிரொலிக்கும் என்று கூறுகின்றனர் மனித உரிமை ஆர்வலர்கள்.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்திற்கு எதி ராக மக்கள் நடத்திய போராட்டத் தில் மே 23, 2018 அன்று 13 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட னர். கடந்த வருடம் ஜூன் மாதம் தூத் துக்குடி மாவட்டத் தில் உள்ள சாத்தான்குளத்தில் வியா பாரிகளான ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் இருவரும் ஊரடங்கு காலத்தில் நிர்ணயித்த நேரத்தை தாண்டி இரவில் கடையை திறந்து வைத்திருந்த தாக குற்றம் சாட்டப்பட்டு போலீ சாரால் கைது செய்யப்பட்டனர். விசார ணைக் கைதிகளாக இருந்த போது அவர் கள் இருவரும் அடுத்தடுத்து உயிரிழந் தது தமிழகத்தில் பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தியது.

இந்த இரண்டு மனித உரிமை மீறல் சம்பவங்களும் தேர்தல் பொருளாக எதிர்ககட்சியினரால் கையில் எடுக்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமை தூத்துக்குடியில் தேர்தல் பிரசாரத்தில் பேசிய திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் மத்தியில் இருக்கும் பாஜக அரசும், மாநிலத்தில் இருக்கும் அதிமுக அரசும் சேர்ந்து நடத்திய பச்சை படு கொலை என்று குற்றம் சாட்டினார். சாத்தான்குளம் காவல் மரணத்தையும் எடுத்துக்கூறி, தமிழ்நாட்டில் நான்கு ஆண்டு களில் சட்டம் ஒழுங்கு எப்படியிருக்கிறது என்பதற்கு இந்த சம்பவங்கள் உதாரணம் என்று பேசினார்.

**நிராகரிக்கப்படும் விலைவாசி உயர்வு பிரச்சனை**

தொழில் வளர்ச்சியில் பின் தங்கியிருக்கும் தென் தமிழ்நாட்டில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மத ரீதியாகவும், மற்ற மாவட்டங்களில் சாதி ரீதி யாகவும் வாக்குகள் செலுத்தப்படும் என்றாலும், விலைவாசி உயர்வு தேர்தலில் தீர்மானிக்கும் காரணிகளுள் முக்கியமானதாக இருக்கும் என்கிறார் மூத்த பத்திரிக்கையாளர் ப. திருமலை.

கிடுகிடுவென்று உயரும் எரிவாயு சிலிண்டர் விலை, பெட்ரோல், டீசல் விலை, அதைச் சார்ந்த போக்குவரத்து கட்டண உயர்வு, மருந்து விலை போன்றவை பற்றி அரசியல் கட்சிகள் அக்கரை காட்டவில்லை என்றாலும், நடுத்தர வர்க்க மக்கள் மத்தியில் இவை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. உள்ளாட்சி தேர்தலை நடத்தாமல் இருந்ததும் ஆளும் கட்சியினருக்கு பின்னடைவை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது, என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சாட்சிகளைச் சேகரிக்கும் பொறிமுறை நடைமுறையில் சாத்தியமான ஒன்றா?

**பார்த்தீபன்**

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் மேற்கு நாடுகளும் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கும் நிலைமையில், ஐ.நா.வையும் இந்தியாவையும் இலங்கை ஏமாற்றத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. தற்போது ஜெனிவாவைச் சுற்றி வரும் நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கைதான் அதிபுத்திசாலித்தனமாக இராஜதந்திரமாகச் செயற்படுகின்றதா என்ற கேள்விதான் எழுகின்றது. ஏனெனில் பாரிய போர்க் குற்றங்களும், இனப் படுகொலையும் இடம்பெற்றிருப்பது பகிரங்கமாகத் தெரிகின்ற போதிலும், 12 வருடங்காக அனைத்துத் தீர்மானங்களிலிருந்தும் இலங்கை நழுவிக்கொள்கின்றது.

பிரிட்டன் தலைமையிலான இணைத் தலைமை நாடுகளால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கடுமையான வாதப் பிரதி வாதங்கள் தமிழர் தரப்பினராலும், அரசாங்க மற்றும் எதிரணியினராலும் முன்வைக்கப்பட்டுவருகின்றது. தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானத்தை வரவேற்கின்றது. கஜேந்திர குமார் தலைமையிலான தமிழ்த் தேசிய ஜனநாயக முன்னணி தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்து வருகின்றது. விக்னேஸ்வரனும் இதே நிலைப்பாட்டைத்தான் வெளிப்படுத்திவருகின்றார்.

**போர்க் குற்றங்கள் குறித்த ஆதாரங்கள்**

இறுதிப் போரின் போது போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு விரோதமான சம்பவங்கள் இடம் பெற்றிருப்பது இரகசியமான ஒன்றல்ல. அதற்கு பூதக்கண்ணாடியைப் பிடித்துக்கொண்டு புதிதாகத் தேட வேண்டிய தேவையும் இல்லை.

போர் எப்படி இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்தக்கூடிய செய்மதிப் படங்கள் தாராளமாக மேற்கு நாடுகளிடம் உள்ளன. போரின் இறுதிக்காலங்களில் என்ன நடைபெற்றது என்பதை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் செய்மதித் தொழில்நுட்பத்தின் மூலம் அவதானித்துக்கொண்டேயிருந்தன. போர் நகர்வுகள் குறித்து நிமிடத்துக்கு நிமிடம் செய்மதிப் படங்கள் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டேயிருந்தன.

அதனைவிட ஐ.நா. நியமித்த தருசுமன் ஆணைக்குழுவும் நிறைய ஆதாரங்களைத் தேடிவைத்திருக்கின்றது. அந்த ஆதாரங்கள் - சாட்சியங்களின் அடிப்படையில்தான் தருசுமன் அறிக்கை வெளிவந்திருந்தது. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என எம்.ஏ.சுமந்திரன் சொல்லிக்கொண்டிருந்தார்.

இதனைவிட இறுதிப்போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது 2009 ஜனவரி முதலாம் திகதி முதல் மே 19ஆம் திகதி வரை என்ன நடைபெற்றது என்பதற்கான முழுமையான அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார். அவர் கொழும்பில் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் பணிபுரிந்தவர்.

போரின் நடவடிக்கை குறித்து முழுமையான அறிக்கையை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைக்க அவருக்கு வழங்கப்பட்ட கடமையாதும். என்டன் கேஷ் என்ற குறித்த நபர் இலங்கை குறித்த பொறுப்புடையவர் அல்ல. அவர் பிரித்தானிய தூதரகத்தில் பணிபுரிந்தவர். அவரது பணி பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு தெளிவான அறிக்கையை வழங்குதலாகும்.

இதனைவிட ஐ.நா. மற்றும் மேற்கு நாடுகளிடம் மேலும் பெருமளவு ஆவணங்கள் உள்ளன. சனல் 4 இல் வெளியான காணொளி போன்றனவும் இறுதிப்போர் எப்படி நடைபெற்றது என்பதற்கு ஆதாரம். சாட்சியம். இவ்வாறான பல ஆதாரங்களை இராணுவத்தினரே மேற்கு நாடுகளுக்கும், சனல் - 4 போன்ற நிறுவனங்களுக்கும் விற்றுள்ளார்கள் என்ற கருத்து ஒன்றும் உள்ளது.







**ஐ.நா. புதிய பொறிமுறை சாதிக்கப்போவது என்ன?**

இவ்வளவும் இருக்கும் நிலையில், அவற்றை வைத்து எதனையும் செய்யாத ஐ.நா., போர் முடிவடைந்து 12 வருடங்களின் பின்னர் ஆதாரங்கள் - சாட்சியங்களைத் திரட்டுவதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்கப்போவதாகச் சொல்வதும் - அதற்கு மில்லியன் கணக்கில் நிதி ஒதுக்கீட்டைக் கோருவதும் தமிழர்களை மீண்டும் ஏமாளிகளாக்கும் செயற்பாடாகவே இருக்க முடியும். தமது இலக்குகளை அடைவதற்காக அவர்கள் மீண்டும் தமிழர்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றார்கள் என்பதுதான் இதன் அர்த்தம்.

இந்தப் பொறிமுறையைச் செயற்படுத்தத் தேவையான நிதியைப் பெறுவதற்கு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம் வரையில் பொறுத்திருக்க வேண்டும். நிதி ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் அங்குதான் பெறப்படும். பொதுச் சபையின் அடுத்த கூட்டத் தொடர் செப்டம்பரில் இடம்பெறவுள்ளது. அதில் நிதி ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று - அந்தளவு பெருந்தொகையை ஒதுக்குவதற்கு நாடுகள் முன்வருமா என்பது. இரண்டாவது, சீனா, ரஷ்யா போன்றன இலங்கைக்கு ஆதரவாக உள்ளன. அவை தமது நேச நாடுகளுடன் இணைந்து இதனைத் தடுக்க முனையும்.

பொதுச் சபைக் கூட்டத்தை எவ்வாறு கையாள்வது என்பதையிட்டு இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே ஆராயத் தொடங்கிவிட்டது. இது தொடர்பான நடைமுறைகள் குறித்து விரிவாக ஆராய்ந்து, அதனை எதிர்கொள்வதற்கான உபாயங்களை வகுத்துக்கொள்வதில் வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே தமது கவனத்தைக் குவித்திருக்கின்றது. தமக்கு ஆதரவான நாடுகளின் ஆலோசனையையும் இதற்காக இலங்கை பெற்றுக் கொள்ளும். ஆக, ஜெனிவா பிரேரணையில் தமிழர்களுக்கு சாதகமான அம்சம் என கூட்டமைப்புத் தலைமை சொல்லிக்கொள்ளும் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறையைக் கூட கேள்விக்குறியாக்க இலங்கை முற்படுகின்றது.

**சேகரிக்கும் பொறிமுறை இந்தியா வரவேற்குமா?**

அதேவேளையில், இந்த தீர்மானம் என்பது இலங்கையில் உள்நுழைவதற்கான பாதை ஒன்றை மேற்குலகத்திற்கு திறந்து விட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. அதாவது இலங்கையில், இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை சேகரிக்க அல்லது சாட்சியங்களை பாதுகாக்க ஐ.நா இலங்கைக்குள் நுழைய முடியும்.

மாறாக இணைக்குழு நாடுகளான பிரித்தானியாவோ, கனடாவோ அல்லது ஜேர்மனியோ அங்கு சாட்சியங்களை சேகரிப்பது என்ற போர்வையில் செல்ல முடியுமா என்ற கேள்வியும் உள்ளது. அவ்வாறு நிகழுமானால் அது இலங்கை இதுவரை கட்டிக்காத்த இறைமை என்ற பதத்தை உடைத்துவிடும் என்பதே இலங்கை அரசுக்கு முன்னுள்ள பாரிய நெருக்கடி.

இவ்வாறான ஒரு நிலை உருவாகுவதற்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகள் அனுமதிக்குமா என்பதும் முக்கியமான கேள்வி. ஏனெனில் இலங்கையில் ஆரம்பமாகும் இந்த அவதானிப்பு தங்கள் நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் தொடரலாம் என்ற அச்சம் இந்த நாடுகளுக்கும் ஏற்படலாம். அதனால், தீர்மானத்தில் உள்ளது என்பதற்காக இந்தியா போன்ற நாடுகள் இதனை ஆதரிக்குமா என்ற கேள்வியும் உள்ளது.

காஷ்மீர் பிரச்சனை தொடர்பில் இந்தியா அச்சமடைகின்றது என்பது வெளிப்படை. அது தொடர்பில் ஐ.நா கவலை வெளியிட்டு வந்ததும், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி தனது நிலையை மாற்றாததும் நாம் அறிந்ததே. இந்த நிலையில், இலங்கையைத் தமது ஆளுகைக்குள் கொண்டுவருவதற்காக தீர்மானத்தில் இணைக்கப்பட்ட விடயங்கள் அனைத்தையும், நடைமுறைப் படுத்த வேண்டும் என இந்தியாவும் விரும்பாது.

**13 ஆவது திருத்தமும் மாகாண தேர்தல்களும்**

ஜெனிவா தீர்மானத்தின் மூலம் இலங்கையை தமது பிடிக்குள் கொண்டு வந்துவிட்டதாக ஐ.நா.வும் இந்தியாவும் கனவு காண்கின்றன. இலங்கை - இந்திய உடன்படிக்கையில் பிறந்த 13 ஆவது திருத்தம் ஜெனிவா தீர்மானத்தில் இணைக்கப்பட்டிருப்பது தமக்கான ஒரு வெற்றி என இந்தியா கொண்டாடுகின்றது. ஜெனிவாவைத் தாண்டும் வரை மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடக்கும் எனச் சொல்லிவந்த ராஜ பக்ஷக்கள் இப்போது தமது சுருதியை தெளிவாகவே மாற்றிக்கொண்டுள்ளார்கள்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் அதற்காக ஒரு குழு எனக் கூறி, ராஜபக்ஷக்கள் காலங்கடத்தும் நாடகத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார்கள். மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தினால், போராட்டம் வெடிக்கும் என பிக்குகளும் கிளர்ந்தெழத் தொடங்கிவிட்டனர். ஜெனிவா வாக்களிப்பு வரை தூக்கத்திலிருந்த இவர்கள், இப்போது திடீரென திடுக்கிட்டு எழுந்துள்ளார்கள். இதுவும் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலா?

ஆக, மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடக்கும், "13" நடைமுறைப் படுத்தப்படும் என தீர்மானத்தில் எழுதிவிட்டுக் காத்திருந்த இந்தியாவையும், ஐ.நா.வையும் இலங்கை முட்டாளாக்கியுள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தல் இப்போதைக்கு நடைபெறாது என்பது இலங்கையின் சமகால அரசியல் போக்குகளைக் கவனிக்கும் எவருக்கும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஆக, ஜெனிவாவிலிருந்து தமிழர்களுக்கு என்ன கிடைத்தது? கிடைத்ததாக எமக்குக் கூறப்பட்டவை கூட வெறுமனே எழுத்தில் மட்டும்தான் இருக்கப்போகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**31**

**2012 - 13, 19**

* வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

13.

| | | |
|---|---|---|
| 2 | 7 | 12 |
| 7 | 12 | 17 |
| 12 | 17 | ....... |

(1) 20
(2) 22
(3) 25

19. [2 | 4 | 6]  [3 | 5 | 7]  [4 | 6 | 8]  ....................

(1) [5 | 6 | 7]  (2) [5 | 7 | 9]  (3) [6 | 8 | 9]

**2013 - 19**

* வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


19.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 1 | 6 |
| 4 | .... | 3 | 24 |
| 2 | 3 | .... | 30 |
| 16 | 18 | 15 | |

(1) 5, 3  (2) 2, 5  (3) 3, 2

**2014 - 05,28,29**


5. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கான மிகக் குறுகிய பாதையைக் காட்டும் உரு யாது?




(1)  (2)  (3)


* கோலத்திற்கேற்ப 28ஆம் 29ஆம் வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.

28.




(1) 4  (2) 6  (3) 12

29.





(1) 44  (2) 54  (3) 63

**2015 - 11,21**

11. பின்வரும் உருவில் உள்ள கோலத்திற்கு ஏற்ப A,B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்கள் முறையே யாவை?

(1) 4,3
(2) 3,2
(3) 3,4




21. நீரைக் கொண்ட ஒரு பாத்திரத்தின் அடியில் ஒரு நாணயம் உள்ளது. நீர்ப்பரப்பிற்கு மேலே இருந்து பார்க்கும் போது நாணயம் தெரியக்கூடிய இடம் A யைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவுசெய்க




(1)  (2)  (3)

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# தமிழின விடிவிற்காக தன்னை அர்ப்பணித்த இராயப்பு யோசப் ஆண்டகை காலமானார்!



**யாழ்ப்பாணம், ஏப்.02**

**தமிழினத்தின் விடிவிற்காக பல்வேறு வழிகளிலும் பாடு பட்டு உழைத்த மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நேற்றுக்காலை காலமானார்.**

அவருக்கு வயது 80.

நீண்ட காலம் சுகவீனம் காரணமாக ஓய்வு நிலையில் இருந்த மறைமாவட்ட ஆயர் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மருதமடு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் காலமானார் என குருமுதல்வர் தெரிவித்தார்.

இராயப்பு யோசப் ஆண்டகை யுத்த காலப்பகுதியில் பல்வேறு தரப்புக்களுடனும் மக்களின் விடுதலை தொடர்பிலான தொடர் பேச்சுவார்த்தைகளிலும் மக்களின் விடுதலைக்கான செயல்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் தீவிரமாகச் செயல்பட்டுவந்திருந்தார்.

ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் இழப்பு தமிழ் இனத்திற்கே பேரிழப்பாகும் எனப் பல தரப்பினரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். (எ)

# ரவி கருணாநாயக்க உட்பட 7பேருக்கு நேற்றுப் பிணை!

கொழும்பு, ஏப்.02

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு பிணை வழங்கப்பட்டது.

இதன்படி ரவி கருணாநாயக்கவுக்கும் ஏனைய ஆறு பேருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மூலம், அரசாங்கத்துக்கு 1500 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்திய விவகாரம் தொடர்பிலான வழக்கில் ரவி கருணா நாயக்க கடந்த மார்ச் 17 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி, மத்திய வங்கியின் முறிகள் ஏலத்தின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் முன்னாள் ரவி கருணாநாயக்க உட்பட 7 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. (எ)





# முதியோருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப்.02

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட புதிய சோனக தெரு 10ஆம் வட்டாரம் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் உள்ள முதியோர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட முதியோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இதன் பிரதான ஏற்பாட்டாளர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் முத்து முஹம்மது நிபாஹிர், கடந்த வருடம் கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணித்த சுல்த்தான் முஹிதீன் ஜமால் என்பவரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரின் அனுசரணையுடன் வழங்கி இந்த உதவித் திட்டத்தை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி. தா. தம்பி ராசா, ஜே-88 கிராம உத்தியோகத்தர் ஜே- 88 கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதிவாரி முறையில் மாகாண சபைத் தேர்தல்!

## எஸ்.எம். சந்திரசேன தகவல்

அநுராதபுரம், ஏப்.02

மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்டு அந்தத் தீர்மானம் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்கப்படும். மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி முறையில் நடத்த அமைச்சரவையில் பெரும்பாலான உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சுமார் 3 வருட காலத்துக்கும் அதிகமாக பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. தேர்தலை எம்முறையில் நடத்துவது என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது. மாகாண சபைத் தேர்தலை இம்முறை மாத்திரம் பழைய தேர்தல் முறையின் பிரகாரம் நடத்தலாம் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் பிரகாரம் நடத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் யோசனை சமர்ப்பித்தார். எத்தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது.



இப்பிரச்னைக்கு கட்சித் தலைவர் கூட்டத்தில் ஒரு தீர்வைக் கண்டு அதனை எதிர்வரும் வாரம் இடம் பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசவாரி முறைமையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என அமைச்சரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் தனித்துப் போட்டியிடுவதாக குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தனித்து செல்வதும், இணைந்திருப்பதும் அவரவர் கட்சியின் தீர்மானமாகும்.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த எதிர்க் கட்சியினர் முயற்சிக்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கம் ஒருபோதும் பலவீனமடையாது. சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படும்- என்றார். (எ)

# மூன்றாவது கொரோனா அலை இலங்கையில் ஏற்படும் அபாயம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.02

**இலங்கையில் மூன்றாவது கொரோனா அலை ஏற்பாடும் அபாயம் உள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன எச்சரித்துள்ளார். எனவே, பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**



சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எனவே, புத்தாண்டு கொண்டாட்டங்களை சிறிய அளவில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி முன்னெடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

## வடக்கில் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டாம்

# சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.02

வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளிலுள்ள இறுக்கத்தை தளர்த்தவேண்டாம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்:

வடக்கில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்த வண்ணமுள்ளனர். இந்நிலையில் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பினரும் பயணம் செய்கின்றனர். விஷேடமாக ஆசிரியர்கள் பெருமளவானவர்கள் வெளிமாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். அவர்கள் பயணிக்கும் பேருந்துகளில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதுதொடர்பில் அதிக கவனம் செலுத்தி அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டிருந்தார்.


இதற்குப் பதிலளித்த பணிப்பாளர், இவ்விடயம் தொடர்பில் பொலிஸாரே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பதிலளித்தார்.

இதைவிட வெளிமாகாணம், மாவட்டங்களில் தொழில் நிமித்தம் சென்று வருவோருக்கு முன்னைய இறுக்கமான நடைமுறைகள் இல்லை என்பதனையும் அதனால் கூடவே பணியாற்றுவோருக்கு ஆபத்தானது. என்பதனை பொதுச்செயலாளர் எடுத்துரைக்க, பணிப்பாளர் சுகாதார அமைச்சு அந்த இறுக்கமான நடைமுறைகளைத் தொடர்ந்தும் நீடிக்கத்தேவையில்லை என அறிவுறுத்தியுள்ளதாகக் கூறினார். இது தொடர்பில் சுகாதார அமைச்சே அறிவுறுத்தல்களை வழங்கும் எனக் கூறியுள்ளார்.

அதிபர், ஆசிரியர், மாணவர் சார்ந்த சமூகம் அதிகளவானது. அதனை மிக நிதானத்துடன் பாதுகாக்க நாம் அனைவரும் இணைந்து பணியாற்றவேண்டிய அவசியத்தை இருவரும் வலியுறுத்தினர். (எ)

# அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவில் ஜனாதிபதியின் தலையீடில்லை!

## காமினி லொகுகே விளக்கம்



கொழும்பு, ஏப்.02

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயல்பாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிடவில்லை, அரசியல் அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் அதிகாரத்தால் பாதிப்பட்ட அரச சேவையாளர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை குறுகிய காலத்தில் நிறைவேற்றியுள்ளார். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல சவால்கள் தோற்றம் பெற்றன. சிறந்த திட்டமிடல் ஊடாக அனைத்து சவால்களும் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைக்க பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேசிய உற்பத்திகளை மேம்படுத்தி உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பலப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் தலையீடு காணப்பட்டதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஷ்மன்) காரியாலயம் நிறுவப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் குறித்து பல தரப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. விசாரணை ஆணைக்குழு எவ்வித அரசியல் அழுத்தங்களுமின்றி விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

ஆணைக்குழுவின் செயல்பாடுகளில் ஜனாதிபதி ஒருபோதும் தலையிடவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டுள்ள அரச சேவையாளர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு- என்றார். (எ)

## ஆசிரியர் ஒருவருக்கு கொரோனா:

# கொழும்பு ஆனந்தா கல்லூரி 7-8 ஆம் தரங்கள் மூடப்பட்டன

கொழும்பு,ஏப்.02

கொழும்பு, ஆனந்தா கல்லூரியின் தரம் 7, 8 ஆகியவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

ஆசிரியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால் ஆனந்தா கல்லூரியின் சுமார் 70 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்ட ஆசிரியரின் முதல் நிலை தொடர்புகளாக அடையாளம் காணப்பட்டு மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மட்டு. ஓட்டமாவடியில் இதுவரையில் 57 கொரோனா சடலங்கள் அடக்கம்

ஓட்டமாவடி, ஏப்.02

மட்டக்களப்பு - ஓட்டமாவடி சூடுபத்தினசேனை கொரோனா வைரஸ் அடக்கஸ்தலத்தில் இதுவரை 57 பேரின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 5ஆம் திகதியிலிருந்து அங்கு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் மரணித்தவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

இதில் கத்தோலிக்கர்கள் இருவரின் சடலங்களும் உள்ளடங்கும் என்று ஓட்டமாவடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட்டு வந்த நிலையில், முஸ்லிம் மக்களின் கடும் எதிர்ப்புக்குப் பின்னர் அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு





# ஆயுததாரிகளின் தாக்குதலில் எதியோப்பாவில் 30 பேர் பலி!

அடிடஸ் அபாபா, ஏப். 02

எதியோப்பாவில் ஆயுததாரிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 30 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

அந்த நாட்டின், மத்திய ஒரோமியா பிராந்தியத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புகுந்த துப்பாக்கிதாரிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலானது மத்திய அரசாங்கத்திற்கு சவால் விடும் வகையில் இன வன்முறையை தூண்டியுள்ளது.

தாக்குதலை நேரில் கண்ட 50 வயதான முதியவர் ஒருவர், தாங்கள் கார்களை பயன்படுத்தி இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் சென்றனர் எனவும் 30 பேரை அடக்கம் செய்தனர் என்றும் கூறினார்.

அதேநேரம் முதியவரும் அவரது குடும்பத்தினரும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு அருகிலுள்ள அரசாங்க அலுவலகத்திற்கு தப்பி ஓடிவிட்டதாகவும் கூறியுள்ளார். (ஐ)




# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: நான்கு பொதுமக்கள் உயிரிழப்பு!

## ஆயுததாரி கைதானார்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஏப்.02

அமெரிக்கா - கலிபோர்னியா - லொஸ்ஏஞ்சல்ஸின் ஒரேஞ்ச் நகரிலுள்ள வணிக வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சிறு குழந்தை ஒன்று உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் இம்பெற்ற இந்தப் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வணிக வளாகத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் குறித்து அறிந்த பொலிஸார் அங்கு சென்றபோது துப்பாக்கி சூட்டு காயங்களுடன் நால்வர் இறந்து கிடந்தனர். சந்தேகநபர் கைது செய்யப்பட்டமையால் அச்சுறுத்தல் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் கடந்த இரு வாரங்களில் பொது மக்களை இலக்கு வைத்து இடம்பெற்ற மூன்றாவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இதுவாகும். மார்ச் 16 அன்று அட்லாண்டா பகுதியில் துப்பாக்கிதாரி ஒருவரால் எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மார்ச் 22 அன்று கொலராடோ நகரில் உள்ள வணிக வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனநாயக போராட்டவாதிகள் எழுவரை குற்றவாளிகளாக தீர்ப்பளித்தது நீதிமன்று!

## "ஹொங்கொங்கின் தந்தை", பிரபல ஊடக தலைவரும் உள்ளடங்குவர்

ஹொங்கொங், ஏப். 02

ஹொங்கொங்கின் ஜனநாயகத்தின் தந்தை என்று போற்றப்படும் மார்ட்டின் லீ, ஊடக நிறுவன அதிபர் ஜிம்மிலாய் உட்பட 7 பேரை குற்றவாளிகளாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டு சீனா தேசிய பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹொங்கொங்கில் போராட்டங்கள் வெடித்தன.

இதைத் தொடர்ந்து 2019 ஒகஸ்ட் 18 அன்று ஹொங்கொங் நகரில் அமைதி வழி போராட்டம் இடம்பெற்றது. அங்கீகரிக்கப்படாத இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்தனர். அதில் பங்கேற்றனர் என்று மூத்த அரசியல்வாதி மார்ட்டின் லீ, ஊடக நிறுவன அதிபர் ஜிம்மி லாய் மற்றும் 5 ஹொங்கொங் சட்ட சபை உறுப்பினர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தொடர்ந்தனர்.

82 வயதான மார்ட்டின் லீ, ஹொங்கொங் ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபக தலைவர் ஆவார். இவர் ஹொங்கொங்கின் ஜனநாயக தந்தையாகக் கொண்டாடப்படுகின்றார். இதேபோல, ஹொங்




கொங்கின் கோடீஸ்வரர்களில் ஒருவரான ஜிம்மி லாய், அப்பிள் டெய்லி பத்திரிகையை நடத்தி வருகின்றார். ஹொங்கொங்கில் அதிகம் விற்பனையாகும் இந்தப் பத்திரிகை சீன அரசின் அடக்கு முறைகளை கடுமையாக விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் 20 நாட்கள் நடந்த இந்த வழக்கில் ஐவர் தம் மீதான குற்றங்களை மறுத்தனர். இருவர் குற்றங்களை ஏற்றுக் கொண்டனர். இதைத் தொடர்ந்து வழக்கை விசாரித்த நீதிபதி அமண்டா வூட் கொக் அனைவரையும் குற்ற வாளிகளாக நேற்று அறிவித்தார்.

எனினும், இவர்களுக்கான தண்டனைகளை அவர் அறிவிக்கவில்லை. இவர்களுக்கான தண்டனை பிறிதொரு நாளில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மீதான குற்றங்களுக்கு அதிகபட்சமாக 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் சிறையில் உண்ணாவிரதம்!

மொஸ்கோ, ஏப். 02

தற்போது சிறையில் இருக்கும் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

முதுகு, கால்களிலும் கடும் வலி இருப்பதாகவும் இதற்கு சிகிச்சை வழங்குமாறு கோரியே நவல்னி உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை மிகக் கடுமையாக விமர்சித்துவரும் நவல்னி, சிறையில் உள்ள ஒவ்வொரு மணி நேரமும் சித்திரவதைக்குள்ளாவது போன்று உள்ளது எனத் தெரிவித்துள்ளார். உடலில் கடும் வலி உள்ள நிலையில் மருத்துவ சிகிச்சைக்கான தனது கோரிக்கை புறக்கணிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிகிச்சை கோரி நவல்னி சிறைச்சாலைத் துறைக்கு எழுதிய கடிதத்தை அவரின் சமூக ஊடகக் குழு, நேற்று வெளியிட்டுள்ளது. அதில் தன்னால் தெரிவு செய்யப்படும் மருத்துவரிடம் சிகிச்சை பெற அனுமதிக்குமாறு நவல்னி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் நவல்னியை சிறையில் மருத்துவர்கள் பரிசோதித்தனர். அவரது உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# நடிகர் ரஜினிகாந்துக்கு தாதா சாகேப் விருது!

சென்னை, ஏப். 02

நடிகர் ரஜனிகாந்துக்கு இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் ரஜினிகாந் தாதா சாகேப் பால்கே விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக இந்திய மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தனது ருவிட்டர் பதிவில் அறிவித்துள்ளார்.

70 வயதாகும் ரஜினிகாந்தின் கலைச் சேவையைக் கௌரவிக்கும் வகையில் ஏற்கனவே பத்ம பூஷண், பத்ம விபூஷண் உள்ளிட்ட விருதுகளை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இந்நிலையில் ரஜனிகாந்துக்கு மற்றொரு உயரிய விருதாக தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து அவருக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# பிரேஸிலில் மார்ச்சில் மட்டும் தொற்றுக்கு 66,570 பேர் பலி!

பிரேசிலியா, ஏப். 02

பிரேஸிலில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 666,570 பேர் கொரோனா தொற்றால் பலியாகினர் என்று அந்த நாட்டின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது கடந்த மாதத்தை விட இரு மடங்கு அதிகரிப்பாகும். இந்நிலையில், நாட்டின் சுகாதார சேவைகள் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஜயர் பொல்சொனரோ தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றை கையாண்டது தொடர்பில் அவர் கடும் விமர்சனங்களை சந்தித்தார். இந்நிலையில், அவரின் அமைச்சர்கள் 6 பேர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர்.

இதே சமயம், அவர் உள்ளூர் மக்கள் தலைவர்களின் அறிவிப்பை தொடர்ந்து முடக்க நடவடிக்கைகளை அவர் ஆதரிக்கவில்லை.

இதேசமயம் கடந்த நேற்று முன்தினம் புதன்கிழமை 3800பேர் தொற்றால் இறந்தனர். 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் முடங்கியது பிரான்ஸ்: கட்டுப்பாடு ஒரு மாதம் நீடிக்கும்!

பாரிஸ், ஏப். 02

கொரோனா கட்டுப்பாடுகள் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்படுகின்றது என்று ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் அறிவித்துள்ளார். அத்துடன் பாடசாலைகளும் மூடப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

வைரஸ், திரிபு அடைந்த வைரஸ் தொற்று மிக உச்சமாக பரவி வருகின்றது. தற்போது நாளாந்தம் சுமார் 40 ஆயிரம் தொற்றாளர்கள் பதிவகாகின்றனர். இதனாலேயே 19 பிராந்தியங்களில் இருந்த முடக்க நிலை நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது.

எனினும், இம்முறை கட்டுப்பாடுகள் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தடுப்பூசி முறைகள் வெற்றி பெற்றால் உணவகம், அருந்தகம், தியேட்டர்களை மே மாதம் நடுப்பகுதியில் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இதேநேரம், தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 95,337ஆக உயர்ந்துள்ளது. ஓரிரு நாட்களில் ஒரு இலட்சத்தை எட்டலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹசல்வூட்டும் விலகினார்! சென்னைக்கு பின்னடைவு!!

சென்னை, ஏப். 02

இம்முறை ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாடும் வேகபந்து வீச்சாளரான ஜோஸ் ஹசல்வூட் விலகியுள்ளார்.

சென்னை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய ஹசல்வூட்டின் விலகல் சென்னை அணிக்கு நிச்சயம் பின்னடைவை ஏற்படுத்தும். இவருக்கு மாற்று வீரரை இன்னமும் அணி நிர்வாகம் தெரிவு செய்யவில்லை.

தனிமைப்படுத்தல், கிரிக்கெட்டிலிருந்து சிறிய இடைவெளி வேண்டும். இதனால் குடும்பத்துடன் நேரத்தை செலவிட விரும்புகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகும் மூன்றாவது வீரர் இவராவார். ஏற்கனவே ஹைதராபாத்தின் மிற்செல் மார்ஷ், பெங்களூரின் ஜோஸ் பிலிப் ஆகியோர் தொடரிலிருந்து விலகியுள்ளனர். (ஐ)

# பங்களாதேஷுடனான ரி-20: நியூஸிலாந்து பெரு வெற்றி!

ஒக்லாந்து, ஏப். 02

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியை 65 ஓட்டங்களால் நியூஸி லாந்து வெற்றி கொண்டது. இதன் மூலம் இருபது - 20 தொடரை முழுமையாக வெற்றி கொண்டது அந்த அணி.

நியூஸிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி அங்கு ஒரு நாள், இருபது - 20 தொடர்களில் விளையாடி யது. ஒருநாள் தொடரை முழுமையாக நியூஸி லாந்து வெற்றி கொண்டது. தொடர்ந்து இருபது 20 தொடர் ஆரம்பமானது. முதல் இரு போட்டிகளையும் நியூஸி லாந்து வெற்றி கொண்ட நிலையில் இறுதிப் போட்டியில் இரு அணிகளும் நேற்று மோதின.

ஒக்லாந்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

போட்டி ஆரம்பமாகும் முன்னரே பெய்த மழையால் போட்டி பாதிக்கப்பட்டது. இதனால், போட்டி 10 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.



முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு தொடக்கம் கொடுத்த மார்ட்டின் குப்தில், பின் அலன் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். 19 பந்துகளை சந்தித்த குப்தில் 5 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதேபோல, பின் அலனும் 29 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசி 71 ஓட்டங் களை குவித்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கிளன் பிலிப்ஸ் 14, டரில் மிற்செல் 11 ஓட்டங்களை எடுத்தனர்.

10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்களை குவித்தது நியூஸி லாந்து அணி.

பங்களாதேஷின் பந்துவீச்சில் தஸ்கின் அஹமட், சொரிபுல் இஸ்லாம், மஹடி ஹசன் ஒவ்வொரு விக் கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்குத் தொடக்கம் கொடுத்த முஹமட் நயிம் 19, சௌம்ய சர்கார் 10 ஓட்டங்களை எடுத்தனர். ஆறாவது வீரராக இறங் கிய ஹூசைன் மட்டும் 8 பந்து களில் ஒரு சிக்ஸரு டன் 13 ஓட்டங் களை எடுத்தார். மற்ற வீரர்கள் எவரும் இரட்டைப் படை இலக் கத்தை தொடாத நிலையில் 9.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த அந்த அணி 76 ஓட்டங் களை எடுத்தது.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சில் ரொட் அஸ் ரெல் 4, ரிம் சௌதி 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக பின் அலனும், தொடர் நாயகனாக கிளன் பிலிப்ஸும் தெரிவாகினர். (ஐ)

# மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட்: இலங்கையின் நடுவரிசை தடுமாற்றம்!



அன்டிகுவா, ஏப். 02

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதி ரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 280 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து தடுமாறு கிறது இலங்கை அணி.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இலங்கை அணி அங்கு தற் போது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது. 29 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டி யில் இரண்டாம் நாள் ஆட்டம் முடி வில் 136 ஓட்டங் களுக்கு 3 விக் கெட்களை இழந்திருந்தது.

இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது, தினேஷ் சந்திமால் 34, தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களுடன் ஆட்டத் தைத் தொடங்கினர். சந்திமால் 44 ஓட்டங்களை எடுத்த நிலையில், கெப்ரியாலின் பந்தில் ஆட்டமிழந் தார்.

பின்னர் தனஞ்சய டி சில்வா 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பி னர். இதனால் இலங்கை அணி தடுமாறியது. மூன்றாம் நாள் ஆட் டம் முடிவடைந்தபோது 8 விக் கெட் இழப்புக்க 250 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுள்ளது.

பதும் நிஷாங்க 49, எம்புலு பிட்டிய 0 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் ஜோசப், ஹோல்டர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றியுள்ளனர். (ஐ)



## ஐ.பி.எல் தொடர்: மார்ஷ் விலகல்! மாற்று வீரராக றோய்

ஹைதராபாத், ஏப். 02

ஹைதராபாத் சன்ரைசர்ஸின் சகலதுறை வீரர் மிற் செல் மார்ஸ் அணியிலிருந்து விலகியுள்ளார். அவர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே அணியிலிருந்து விலகினார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு பதிலாக இங்கிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஜஸன் றோய் சேர்க்கப்பட்டுள்ளார். ஜஸ ன் றோய்க்கு அடிப்படை விலை 2 கோடி இந்திய ரூபா வுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அதே விலைக்கு சன்ரைசர்ஸ் அணி நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இம்மாதத் தொடக்கத்தில் நியூஸிலாந்துக்கு எதிரான இருபது - 20 தொடரில் களமிறங்கிய மிற்செல் மார்ஷ், ஐ.பி.எல். தொடருக்கு முன்பாக ஒரு வாரம் தனிமைப் படுத்தப்பட்டு இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் மிகவும் கவலை தெரிவித்திருந்த நிலையில் தொடரி லிருந்து விலகியுள்ளார். (ஐ)

## ஒஸாகாவின் தொடர் வெற்றியை பறித்தார் கிரேக்கத்தின் மரியா!



மியாமி, ஏப். 02

ஜப்பானின் நவோமி ஒஸாகா வின் தொடர் வெற்றி நேற்றுடன் முடிவுக்கு வந்தது. மியாமி ஓப்ப னின் காலிறுதி போட்டியில் மரியா சக்கரியி டம் அவர் தோல்விய டைந்தார்.

அமெரிக்காவின் பிரபல தொடரான மியாமி ஓப்பன் ரென் னிஸ் தற்போது நடக்கிறது. இதில், நேற்று நடந்த காலிறுதி ஆட்டத் தில், 6-0, 6-4 என்ற செற் கணக் கில் இரண்டாம் நிலை வீராங்கனை யான நவோமி ஒஸாகாவை 23ஆம் நிலை வீராங்கனையான கிரேக்கத் தின் மரியா சக்கரி வீழ்த்தி அரையி றுதிக்கு நுழைந்தார். 2020 பெப்ர வரிக்குப் பிறகு இந்த தோல்வி ஒசாக்காவிற்கு முதல் முறையாகும். ஒஸாகா 23 போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகளை பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை, மனிதாபிமானமற்ற செயல்பாடுகள் தொடர்கின்றன!

## இலங்கை குறித்து அமெரிக்கா அதிருப்தி

வோஷிங்டன்,ஏப்.02

இலங்கையில் தொடரும் சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற செயல்பாடுகள், தன்னிச்சையான கைது நடவடிக்கைகள், ஊடகவியலாளர்கள் கைது, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுபான்மையினரை குறிவைத்து மேற்கொள்ளப்படும் குற்றங்கள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொடர்பான மனித உரிமை அறிக்கையை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019 இல் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் 2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றது. இருப்பினும் கொரோனா தொற்றால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் சர்வதேசத்தின் பார்வையையும் குறைந்த உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பையும் தடுத்ததாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், கொரோனா தொற்றை காரணம் காட்டி செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற பிரசாரச் செலவுகள், அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்ற விடயங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்பைப் பேணுவதற்கு பொறுப்பேற்றுள்ள பொலிஸார் நவம்பர் 20 ஆம் திகதி உருவாக்கப்பட்ட பொதுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இராணுவம், குறிப்பாக வரையறுக்கப்பட்ட உள்நாட்டுப் பாதுகாப்பு பொறுப்புக்களைக் கையாள கைது அதிகாரம் இல்லாமல் அழைக்கப்பட வழிவகுத்தது என சுட்டிக்காட்டியுள்ளது.

இதனையடுத்து நீதித்துறை மற்றும் சுயாதீன அரசு நிறுவனங்களின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களும் சிவில் சமூகக் குழுக்களும் பரவலாக விமர்சித்த நிலையிலும் ஒக்ரோபர் 22 இல் அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேறியது.

மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு போன்ற அமைப்புக்களுக்குரிய நியமனங்களை வழங்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

ஈஸ்டர் தாக்குதலின் போது கொண்டுவரப்பட்ட பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான அவசரகால நிலையால் பாதுகாப்புத் தரப்பினருக்கு கைது செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டது. பின்னர் 2019 ஒகஸ்டில் குறித்த அவசரகால நிலை முடிவுக்கு வந்தது.

எவ்வாறாயினும், அவசரகால நிலை காலாவதியானதிலிருந்து ஒவ்வொரு மாதமும் பொதுப் பாதுகாப்பை உறுதிசெய்ய படைகளை அனுப்பும் உத்தரவை அரசாங்கம் வர்த்தமானி செய்து, இராணுவத்தை தொடர்ந்தும் நிலைநிறுத்தியது.

இறந்த தற்கொலை குண்டு தாரர்களுக்கு பொருள் ஆதரவு மற்றும் தொடர்ச்சியான விசாரணைகளுக்காக பலர் கைது செய்யப்பட்டபோதும் தாக்குதல்களில் ஈடுபட்டதாக சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடரப்படவில்லை என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் சட்டவிரோத செயல்பாடுகள், சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற முறையில் செயல்படுதல், தன்னிச்சையாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுதல், ஊடகவியலாளர்கள் கைது, பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுபான்மையினரை குறிவைத்து மேற்கொள்ளப்படும் குற்றங்கள் குறித்தும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ)

## விபத்துடன் தொடர்புடையவர் விடுதலை வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை, ஏப்.02

திருகோணமலை - சர்தாபுர பகுதியில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற விபத்துடன் தொடர்புடைய கார் சாரதியை பொலிஸார் உடனடியாக விடுதலை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதியை மறைத்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் சர்தாபுர பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி அதிவேகமாக வந்து கொண்டிருந்த கார் வீதிக்கு அருகில் நின்று கொண்டிருந்த நபரை மோதியது.

இதில் வீதியில் நின்று கொண்டிருந்த திருகோணமலை கப்பல்துறை ஆறாம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அந்தோனி முத்து அந்தோனிசாமி என்பரே ( வயது 48) உயிரிழந்தார். இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கைது செய் யப்பட்ட சாரதி அதேநாளில் விடுதலை செய்யப் பட்டார். எனவே, உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நீதி யைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரி ஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்தவரின் வீட்டுக்கு போக்குவரத்து பொலிஸார் வருகை தந்து காரின் சாரதியின் உறவினர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 25ஆயிரம் ரூபாய் வழங்கியதாகவும், இப்பணத்தை வைத்துக் கொள்ளுமாறு பொலிஸார் கூறியதாகவும் உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்காமல் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பணத்தை பெற்றுக் கொடுப்பது நீதியா? எனக் கோரியும், தீர்க்கமான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷம் எழுப்பினர். விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் வீதியின் குறுக்காக வைக்கப்பட்டு வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதால் அப்பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மன்னாரில் மக்களின் வாழ்வாதார காணிகளை இராணுவம் பிடிக்கிறது!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம். பி. சாடல்



மன்னார், ஏப்.02

**மன்னாரின் சன்னார், ஈச்சலவாக்கை கிராம மக்களின் வாழ்வாதாரக் காணிகளை இராணுவம் கையகப் படுத்துவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்நிலையில் அந்தப் பகுதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.**

இதன் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு

“மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சன்னார், ஈச்சலவக்கை கிராமங்களில் சுமாராக 400 குடும்பங்கள் வாழ்கின்றனர். போருக்குப் பின்னர் குறித்த குடும்பங்களுக்கு அவர்கள் மீளக் குடியிருப்பதற்கு மாத்திரமே காணிகள் வழங்கப்பட்டன. அந்த மக்களுக்கு விவசாய காணி அல்லது வாழ்வாதார காணியே வழங்கவில்லை.

“தொடர்ச்சியாக அந்த மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக காணியை கேட்டு அரச திணைக்களங்களில் விண்ணப்பித்துள்ளனர். இந்த நிலையில் தற்போது விடத்தல்தீவு இராணுவ பயிற்சி பாடசாலை என இராணுவத்தால் அழைக்கப்படுகின்ற சன்னார் பயிற்சி முகாமிற்கு அருகாமையில் ஏற்கனவே அவர்கள் 400 ஏக்கர் காணியை வன இலாகா திணைக்களத்திடம் இருந்து விடுவித்து அவர்களே வைத்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

“இந்த விடயம் தொடர்பாக கடந்த மாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை கூட்டத்தில் என்னால் இந்த பிரச்னை முன்மொழியப்பட்டது. இதற்கு தலைமை தாங்கிய அமைச்சர் சமல் ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ன ஆகியோர் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அடுத்த கூட்டத்தில் பதில் வழங்குவதாக கூறி இருந்தனர்.

“கூட்டம் கடந்த 25 ஆம் திகதி இடம் பெறுவதாக இருந்தது. எனினும், குறித்த கூட்டம் இடம்பெறவில்லை. தற்போது குறித்த காணி விடயம் தொடர்பாக மக்கள் என்னிடம் தொடர்ச்சியாக முறையிட்டு வந்தனர். இதையடுத்தே நான் நேரில் வந்து பார்த்தேன்.

“மக்களின் வாழ்வாதார காணிகளை இராணுவம் பிடித்து வாழ்வாதாரத்தை இல்லாது செய்கின்றது. அரசாங்கம் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து வருகின்றது. எனவே, அரசாங்கம் இவ்வாறான செயல்பாடுகளை உடனடியாக நிறுத்தி சன்னார், ஈச்சலவக்கை பகுதியில் வசிக்கின்ற 400 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆகக் குறைந்தது ஓர் ஏக்கர் காணியாவது விவசாயத்திற்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்”- என்றார். (ஐ)

வடக்கு சுகாதார தொண்டர்களை

# 100,000 வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ளீர்ப்பதற்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஏப். 02

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக சேவையாற்றுவோரை ஒரு இலட்சம் இளையோருக்கு அரச தொழில் வழங்கும் திட்டத்துக்கு உள்ளீர்த்து நிரந்தர நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர், கலாநிதி பீ.பி.ஜயசுந்தரவுக்கு இந்த பணிப்பை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரித்தார்.

வடக்கு வைத்தியசாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றியவர்களுக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நிரந்தர நியமனம் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக நியமனம் இடைநிறுத்தப் பட்டது.

இதில், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்திருந்த நிலையில் 2019 ஜனாதிபதி தேர்தலின் பின்னான ஆட்சி மாற்றத்தையடுத்து நிதி அமைச்சின் செயலாளரின் பணிப்பில் அனைத்து புதிய நியமனங்களும் இடைநிறுத்தப்பட்டன. இந்த நிலையில் தமக்கான நிரந்தர நியமனத்தை இடைநிறுத்தி அநீதி இழைக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட சுகாதார தொண்டர்கள் தெரிவித்ததுடன், வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# கடைக்கு சென்றவர் திடீரென மயங்கி சாவு

தென்மராட்சி, ஏப். 02

சாவகச்சேரியில் பொருட்கள் வாங்க சென்றவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் சதொச விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆண் ஒருவரே இவ்வாறு திடீரென உயிரழந்தார். மயங்கி விழுந்தவரை உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது.

உயிரிழந்தவர் நேற்றிரவு வரை அடையாளம் காணப் படவில்லை. உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

**நெருங்குகிறது ஈஸ்டர் தினம்:**

# வவுனியா தேவாலயங்களில் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

வவுனியா, ஏப். 02

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வவுனியாவின் தேவலாயங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின ஆரதானையின்போது இடம்பெற்ற தற்கொலை தாக்குதல்களால் பல பொதுமக்கள் உயிரிழந்தனர். இதனால், தற்போது நாட்டில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு நிகழ்வுகள் வருகின்ற 4ஆம் திகதி நாடுமுழுவதும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் இடம் பெறவுள்ளன. இந்நிலையிலேயே வவுனியா மாவட்டத்தின் அனைத்து தேவாலயங்களிலும் இராணுவம், பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# மனைவியை கொன்றபின் கணவரும் தற்கொலை!

## கிளிநொச்சியில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 02

குடும்பத் தகராறு காரணமாக மனைவியை கொன்றவர் தானும் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி - பரந்தன், சிவபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவர்களிடையே அடிக்கடி தகராறு நிலவி வந்ததாகவும், நேற்றைய தினமும் அவர்கள் சண்டையிட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே மனைவியை கொன்றுவிட்டு, கணவன் தற்கொலை செய்துள்ளார்.

இருவரின் சடலங்களையும் வீட்டிலிருந்து மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# குடைசாய்ந்தது டிப்பர்: சாரதி படுகாயம்!

மன்னார், ஏப். 02

மன்னார் தள்ளாடி சந்தியில் கிரவல் மண் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் அதனை செலுத்தி வந்த சாரதி படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதவாச்சியிலிருந்து மன்னார் நகரம் நோக்கி கிரவல் மண் ஏற்றி வந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

வேகக் கட்டுப்பாட்டை டிப்பர் வாகனம் இழந்ததே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. குடை சாய்ந்த டிப்பரின் சாரதியை மீட்டவர்கள் அவரை மன்னார் பொது மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. F.X. அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-நெய்தல் நிலத்தின் வாழ்வியல் பகுதி-02



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலய திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி கருமாரி அம்மன் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலய திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org